
கோகுலம்

2-7-1978 விலை 60 காசு



பத்மாவின் பள்ளிக்கூடம்



பள்ளிக் கூடம் போவது என்றால்
பத்மாவுக்குப் பிடிக்காது.
பலபேர் சொல்லிப் பல பேர் கெஞ்சிப்
பார்த்தால் கூடப் பலிக்காது.

திங்கட்கிழமை காது வலித்தால்
செவ்வாய்க் கிழமை வயிற்றுவலி
எங்கே இருந்து வந்துசேர்ந்த தோ
இவளுக் கென்று முதுகுவலி

புறப்படும் நேரம் பத்மாவிற்குப்
புதியகாரணம் வந்துவிடும்.
பிறகெல்லாமே மறந்து விடும்;
பேச்சும் பாட்டும் நிறைந்து விடும்!

அவளே ஒருநாள் போகிறேன் என்றான்;
அதிசயம் என்ன பேசுவது?
அவளே புத்தகம் எடுத்துக் கொண்டாள்
அப்புறம் என்ன ஏசுவது..?

அவளே வெளியில் நடந்தும்விட்டாள்;
அடடா என்ன சொல்லுவது...?
ஆனால், அதுவோ ஞாயிற்றுக்கிழமை
அன்றைக்கு எதற்குச் செல்லுவது?

- இளையவன்

"கிட்டு பள்ளி போகிறான்"



எட்டு மணி ஆகியும்
கிட்டு தூங்கி விழுகிறான்!
பட்டுப் போல் கதிரவன்
பல்லைக் காட்டி எழுகிறான்!

'கொட்ட வேண்டும் தண்ணியை
குட்ட வேண்டும் தலையிலே'
கட்டி ராமன் சொல்கிறான்
கிட்டு இன்னும் தூங்குறான்!

கட்டிப் பயல் ராமனும்
சோம்பலின்றிப் படிக்கிறான்!
கிட்டு மட்டும் காப்பியைக்
கேட்டு வாங்கிக் குடிக்கிறான்!

'கிட்ட மிட்டுக் காலையில்
தினந் தினமும் கண்விழி
பட்ட மெல்லாம் வாங்கவே
பாட நூல்களை நீ படி!'

கிட்டு, அன்னை சொன்னதைக்
கேட்டு தினம் நடக்கிறான்!
கிட்டு இன்ற வேலையும்
தீர்ந்து போச்சு வீட்டிலே!

'கிட்ட மிட்டு வாழுவேன்
தீய வழி நீக்குவேன்
பட்ட மெல்லாம் வாங்குவேன்
பணமும் நிறையப் பண்ணுவேன்.


கிட்டு சொன்ன சொற்களைக்
கேட்டு அன்னை வந்தனள்
'கிட்டு வாழ்க' என்றனள்
லட்டு ஒன்று தந்தனள்.

பட்டுப் போல் கதிரவன்
பல்லைக் காட்டி எழுகிறான்!
எட்டு மணி ஆனதும்
கிட்டு பள்ளி போகிறான்!

- பூதலூர் முத்து







செய்து பாருங்கள்!

துள்ளி ஓடும் வெள்ளி மீன்!

பள்ளிக்கூடம் திறந்திருக்கும். புதிய வகுப்புக்களுக்குப் போய்ப் புதுப்புத்தகம் நோட்டெல்லாம் வாங்கிக் குவித்திருப்பீர்கள். புத்தகங்களுக்கும், நோட்டுகளுக்கும் அட்டை போட்டுக் கையெல்லாம் வலி எடுத்திருக்குமே..? (உங்கள் அப்பா, அண்ணாவுக்குத் தான் சொல்லுகிறேன்!) புதுப்புத்தகத்தின் புதுமணத்தை நுகர்ந்து மகிழ்ந்திருப்பீர்கள். இனி, அட்டை போடும் போது, துண்டு விழுந்த காகிதத்தில் (பிரவுன் ஷீட்) கொஞ்சம் கைக்கும்வேலை தருகிறீர்களா..? இரண்டு வகைமீன்களைச்செய்வதற்கான முறைகளை விளக்கியிருக்கிறது இங்கே. இடப்பக்கத்திலுள்ள (A) குட்டி மீன். வலப்பக்கத்திலுள்ளது (B) பெரிய மீன்.


இடப்பக்கம்:

(1) சதுரக் காகிதத்தைச் சரிபாதியாக மடி. 2 அதையும் சரிபாதியாக (நான்காக) மடி. 3 மேல் முனையை அதன் கீழ் எதிர் முனைக்குக்கொண்டு வந்து மடி. இப்போது 4-ல் உள்ளபடி இருக்கும். அதேபோலப் பின்பக்கமுள்ள சதுரத்தையும் மடித்து 5--ல் உள்ளபடி முக்கோணமாக்கு. இனி. 5-ன் இடப்பக்கத்தின் கீழுள்ள இரு முனைகளில் ஒரு முனையை நடுக் கோட்டுக்குச் சற்றே தள்ளி மடி. அதே போன்று வலப்பக்கத்து முனையையும் முதலில் மடித்த பகுதியின் மீதாகப் படிய மடி. இப்போது கிடைப்பது 7. இதைத்திருப்பி வைத்துப் பார். மீன் நீரில் நீந்தியபடி ஓடும். இது குட்டிமீன்.

வலப்பக்கம்:

இதோ பெரிய மீன் செய்யும் விதம். ஒன்றுமுதல் நான்கு வரை காட்டியுள்ளபடி காகிதத்தை மடித்து விட்டீர்களா? இனி, 5-ம் படத்தில் காட்டிய படி அந்தமுனையை அப்படியே பின்பக்கமாகச் சுற்றி இந்தப்பக்கம் கொண்டு வந்து 6-ல் காட்டியதுபோலச் செருகி விடு. வால் பக்கத்தை மடித்துஉயர்த்து. இப்போது பெரிய மீன் ரெடி. இதையே கலர்க் காகிதத்தில் செய்தால் இன்னும் ஜோராயிருக்கும்!

-வாண்டு.



தெரியுமா?

2856 'இம்மிகூட இல்லை' என்கிறோமே. அந்தச் சொல்லின் பொருள் தெரியுமா...?

2857 'மயிரிழையில் உயிர் தப்பினான்' என்கிறோமே அந்த 'மயிரிழை' என்பதன் அளவு என்ன...?

2858 இமைக்கும் நேரம் — இதன் காலம் எத்தனை..?

2859 ஒரு சராசரியான ஆறு வயதுக் குழந்தை எத்தனை வார்த்தைகளைக் கற்றுக் கொண்டிருந்தால் அது சமர்த்து என்று சர்டிபிகேட் பெற முடியும்...?

2860 குழல் விளக்கின் ஆயுள் சாதாரணமாக எத்தனை மணிநேரம்? சாதாரண பல்பை விட அதன் உழைப்பு எவ்வளவு மடங்கு..?

2861 ஒரு காகிதப் பென்சிலால் எத்தனை வார்த்தைகளை (உத்தேசமாக) எழுத முடியும்...?

2862 வான சாஸ்திரத்தில் 'அலகு' என்றால் எவ்வளவு தூரம்...?

2863 ஒரு மகாயுகத்துக்கு எத்தனை ஆண்டுகள்...?

2864 ராணுவத்திலுள்ள ஒரு பட்டாலியனில் எத்தனை போர்வீரர்கள் இருப்பார்கள்...?

2865 ஒளியின் வேகம் எவ்வளவு தெரியுமா...?

2866 டெரிலின் துணி யாரால் கண்டு பிடிக்கப்பட்டது...?

2867 பிளாஸ்டிக் தயாரிக்க உதவும் பொருள்கள் யாவை...?

2868 தொலைக் காட்சிக் காமிராவில் உள்ள முக்கியமான பாகத்தின் பெயர் தெரியுமா...?

2869 டிரான்ஸிஸ்டரில் எந்த உலோகம் அதிகமாகப் பயன் படுகிறது?

2870 வானவில் எப்போது தோன்றும்..?

2871 இடம் விட்டு இடம் நகராத பூச்சி உண்டா...?

2872 தங்கத்தைக் கரைக்கும் கலவை உண்டா...? உண்டானால் அது எதனால் ஆனது.

தெரியுமே!

2856 'இம்மி' என்பது ஓர் இலட்சத்து எழுபதாயிரத்து இருநூற்றில் ஒருபாகம்.

2857 ஓர் அங்குலத்தில் 48 ல் ஒருபாகம்

2858 ஒரு விநாடியில் பத்தில் மூன்று பாகம்.

2859 ஆயிரம் வார்த்தைகள்

2860 ஆயுள் 1000 மணி நேரம் - சாதா பல்பை விடப் பத்துமடங்கு உழைக்கும்.

2861 சுமார் 45,000 வார்த்தைகளை.

2862 சுமார் 150 மில்லியன் கிலோமீட்டர்கள்.

2863 மகாயுகத்துக்கு 4,32,00,000 ஆண்டுகள்.

2864 எண்ணூற்று ஐம்பது போர் வீரர்களைக் கொண்டது ஒரு பட்டாலியன்.

2865 விநாடிக்கு ஒரு லட்சத்து எண்பதினாயிரம் மைல்கள்.

2866 டாக்டர் ஜே.டி.டிக்சன், ஜே.ஆர்.வின்ஃபீல்டு என்பவர்களால்.

2867 பீனல், பார்மால் டிஹைடு இவ்விரு ரசாயனப் பொருள்களின் கலவையே பிளாஸ்டிக்.

2868 இக்னுஸ்கோப் (Iconoscope)

2869 ஜெர்மேனியம்

2870 காலையில் 8-30 க்கு முன்பாகவும் மாலையில் 3-30 க்குப் பின்புமே தோன்றும்.

2871 உண்டு. பவளப்பூச்சி.

2872 உண்டு. ஒருபங்கு அடர் நைட்ரிக் அமிலம், மூன்று பங்கு அடர் ஹைட்ரோக்ளோரிக் அமிலம். இவற்றின் கலவைக்கு இராஜத் திராவகம் என்று பெயர். இதில் தங்கக் கட்டியைப் போட்டால் போன இடம் தெரியாமல் போகும்.

பருவத்தே பயிர் செய்:

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்



வேதம் ஓதிய வேதியருக்கு ஓர் மழை நீதிமன்னர் நெறியினருக்கு ஓர் மழை மாதர் கற்புடைமங்கையருக்கு ஓர்மழை மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே என்பது பழைய பாட்டு.


ஒரு காலத்தில் நம்முடைய நாட்டில் தண்ணீர்ப் பிரச்னையென்பதே இல்லாமல் மாதம் மூன்று முறை மழைபெய்து கொண்டு, பொருளாதாரப் பிரச்னைக்கே இடம் இல்லாமல் இருந்த நாடு இந்த நாடு என்பது இந்தச் செய்யுளின் மூலம் தெரிய வருகிறது.

இதை வைத்துத்தான் ஔவைப் பிராட்டியாரும் எந்தெந்தப் பருவத்தில் எந்தெந்த அளவுமழை பெய்கிறதோ அந்தந்தக் காலத்துக்குத் தகுந்தவாறு தான்யங்களைப் பயிர் செய் என்று கூறினர்கள். நவதான்யங்களையும், அந்தக் காலத்தில் அந்தந்தப் பருவத்திற்கு ஏற்றவாறு பயிர் செய்து வந்தால், அதன் பலனுல் நாட்டில் பொருளாதாரப் பிரச்னை ஏற்படாது.

ஆனல், இப்பொழுது நடைபெறுவது எதைப்பயிர் செய்தால் அதிக லாபம் — பணம் கிடைக்குமோ அது போன்ற பயிர்களைப் பயிர் செய்வதும் — அதுவும் எப்படியெல்லாம் உரம் போட்டால் ஒன்றுக்கு நான்கு மடங்கு பலன் ஏற்படுமோ அந்த முறையில் இருந்து வருகிறது. இதனுல் உடனேயே பொருளாதார வசதி ஏற்பட்டாலும்கூட, நாளடைவில் பூமியின் வளமைச் சக்தி குறைவதற்கு இது வழிகோலுகிறது; அது மாத்திரமல்லாமல் அந்த நவீன உரங்கள் மூலம் பல புது விதமான பூச்சிகள் உற்பத்தியாகிப் பயிர்களை அழிக்கின்றன. அதனுல், உண்டாக்கப்படும் தான்யங்களிலும் விஷச் சக்தி உட்கலந்து விடுகிறது. அதை உட்கொள்ளும் மக்களுக்கு ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு, உடலில் வியாதியும் பெருகி, அதனுல் கஷ்டமும் உண்டாகிறது. இந்த வகையில் பொருளாதாரம் பெருகி அதிகப்படியாக உண்டாக்கப்படும் பணமும், இந்த உடல் சிகிச்சைக்கே செலவழிக்கப்பட்டு, இறுதியில் ஒன்றும் மிஞ்சின பாடுமில்லை.

அதனுல் இயற்கையாக வளம் வரக்கூடிய பயிர்களை, இயற்கையாக வளரக்கூடிய உரமிட்டுப் பயிர் செய்வதின் மூலம், சாத்விகமான பயிர்கள் வளர்வதோடு — அந்தப் பயிர்களும் சாத்விகமாக ஆகிவிடுகிறது. அதை உட்கொள்ளும் மக்களும் சாத்விகமாக ஆகிவிடுகிறார்கள்.

ஆகவே அந்தந்தப் பருவத்திற்கு ஏற்றவாறு நவதான்யங்களைப் பயிர் செய்ய வேண்டும். அப்பொழுது உணவு உட்கொள்ளும் முறையிலும் நவதான்யங்களும் மக்களுக்குப் பயன்படும். நவதான்யங்களையும் உணவாக உட்கொள்ளும் முறையும் வளரும்— அதன்மூலம் அரிசி கிடைக்கவில்லையென்ற பிரச்னையின்றி, பொருளாதாரம் நவதான்யங்களை உட்கொள்வதின் மூலம் சரிக்கட்டப்பட்டுவிடும். ஆகவே, அந்தந்தப் பருவத்திற்கு ஏற்றவாறு கம்பு — கேழ்வரகு — சோளம்— மற்றும் பல விதமான கிழங்குகள் முதலியவைகளைப் பயிர் செய்யவேண்டும். பணம் அதிகமாகக் கிடைக்குமென்ற முறையில் பொருளாதார வளர்ச்சிக்கு முயலாமல், பண்பாடு வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இது இன்று நாட்டிற்கு முக்கியமான உபதேசம்.



துறவியின் திருமண வாழ்த்து

'தமிழ் முடி'



அன்றைய திருமணத்துக்கு வந்திருந்தோர் அனைவரும் அப்பொழுது அங்கு வந்த, அந்தத் துறவியையே மிகவும் ஆவலாகவும், வியப்பாகவும் எட்டி எட்டிப் பார்த்தனர்.

அவரைப் பற்றி ஏதேதோ இரகசியமாகப் பேசிக் கொண்டனர். சிலர் வெளிப்படையாகவும் பேசத் தொடங்கினர்.

''இவரோ துறவி! திருமண வாழ்வை வெறுத்தவர். அப்படிப்பட்டவர் எப்படி இந்தத் திருமணத்துக்கு வர இசைந்தார்? வர இசைந்தாலும் இந்த மணமக்களை எவ்வாறு வாழ்த்தப் போகிறார்...?

''மணமக்கள் இல்லறத்தில் ஈடுபட்டு இனிது வாழ்க என வாழ்த்தினால் இவர் இல்லறத்தை விரும்புகிறார், ஆதரிக்கிறார் என்று பொருள்படும். அதனால் அவ்வாழ்த்து இவரின் துறவுக்கு மிகவும் பொருந்தாததாக ஆகிவிடும்!

மணமக்கள் இல்லற வாழ்வை ஆதரித்து வாழ்த்தாமல், துறவு வாழ்வை ஆதரித்து வ ழ்த்தினால், அது மணமக்களின் திருமண வாழ்வுக்கு எதிராகவும், ஆகிவிடும்!''

இந்தத் துறவி மணமக்களை எப்படி வாழ்த்தப் போகிறார் என்பதை அறிய அனைவரும் ஆவல் கொண்டவராய் இருந்தனர். எல்லோரையும் போலவே அந்த மணமக்களும் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

துறவியார் சுவையான ஒரு கதை சொல்லத் தொடங்கினார்!

கயிலாயத்திலே ஒருநாள், பரம்பொருளான பரமசிவனும், பார்வதி அம்மையும் இன்பமாகப் பேசி அளவளாவிக் கொண்டிருந்தனர்.

அந்த வேளையிலே அவர்களை நோக்கி அழுதபடியே ஓடோடி வந்தான் மூத்த மகன் கணபதி. அவனைக் கண்டு பெற்றோர் திகைத்தனர்!

''கணபதி ஏன் அழுகிறாய்..?'' என்று பெற்றோர்கள் கேட்பதற்குள்ளேயே, அவன் முந்திக் கொண்டு ''அப்பா!'' என்று பரமசிவனிடம் ஓடிப்போய் நின்றுகொண்டு பேச முடியாமல் தேம்பி அழுதான். அதைக் கண்ட தந்தையார், மகனை அணைத்தபடியே, ''கணபதி ஏன் அழுகிறாய்? என்ன நேர்ந்தது..?' என்று அன்பு ததும்பக் கேட்டார்.

அதனால் மேலும் அழுகை பொங்கியது என்றாலும், தந்தையின் கனிவால் ஒருவாறு ஆறுதல் அடைந்து கூறினான்.

''அப்பா.. அப்பா..! ஆறுமுகன் வந்து என் காதை நன்றாகப் பிடித்துக் கிள்ளி விட்டானப்பா! அதனாலே காது வீங்கி வலிக்கிறது பார்!'' என்று தன் காதைக் காட்டினான்!

அதைக் கேட்ட பரமசிவன், ''ஆறுமுகன் யாரு..? உன் தம்பி முருகனா..?'' என்று ஒன்றும் தெரியாதவர் போலக் கேட்டார்.

'ஆமாம்' என்று வாயால் கூறாமல் தலையை மட்டும் ஆட்டினான் கணபதி— அவ்வளவு கோபம் அவனுக்கு.

அதனால் தந்தையார், அவசரமாக முருகனைக் கூப்பிட்டு ''ஏண்டா! அண்ணன் காதைப் பிடித்துக் கிள்ளினாய்?'' என்று சற்றுக் கோபமாக அதட்டினார்!

அதற்கு முருகன் தந்தையை நோக்கி, ''அண்ணன் தான் முதலிலே என் தலையிலே உள்ள கண்களைப் பார்த்து — 'ஒன்று' இரண்டு' என்று கூட்டல் வாய்ப்பாடு படித்துக் கேலி பண்ணினான். அதனால்தான் நான் அவன் காதைக் கிள்ளினேன்'' என்றான் குறும்பாக ஆடிக் கொண்டே!

அதைக் கேட்டதும் பரமசிவன், ஆனைமுகனைப் பார்த்து, ''நீ ஏண்டா தம்பியின் கண்களை எண்ணிப் பார்த்துக் கூட்டல் கணக்குப் போட்டாய்?'' என்று சற்றுக் கடிந்து கேட்டார்!

அதற்குக் கணபதியோ, ''அப்பா தம்பி முருகன்தான் முதலிலே என்னுடைய தும்பிக்கையைப் பிடித்து இழுத்து, ஒன்று, இரண்டு என்று முழம் அளந்து பார்த்து — நீட்டல் அளவைக் கணக்கைப் போட்டான்'' என்று வருத்தத்துடன் குற்றம் சாட்டினான். அதைக் கேட்ட தந்தை

முருகனை நோக்கி, 'ஏண்டா' அவன் தும்பிக்கையைப் பிடித்து முழம் போட்டுப் பார்த்தாயா..?'' என்று கோபப் புன்னகையுடன் கேட்டார்.

அதற்குப் பதில் சொல்ல முடியாமலோ, விரும்பாமலோ, அல்லது வேறு எதனாலோ, பதில் எதுவும் கூறாமல் புன்னகைத்தபடி நின்றான் முருகன்.

இதைக்கண்ட பரமசிவனும், தம் பிள்ளைகளின் குறும்பு விளையாட்டிலே மகிழ்ந்தவராகி, அருகில் உள்ள பார்வதியைப் பார்த்துச் சிரித்தபடியே கூறினார்.

''அனைத்து உலகங்களையும் ஈன்றெடுத்து அன்னையாகியும், கன்னியாகவே விளங்கும் பார்வதி தேவியே! குறும்பு செய்யும் உன் குழந்தைகளைப் பார்த்தாயா...?''

அதைக் கேட்டதும் பார்வதி அம்மையார், அன்பின் மிகுதியினாலே ஆனைமுகனைத் தம் அருகிலே அழைத்து மடிமீதிருத்தி உளம் மகிழ்வு கொண்டார்.

இவ்வாறு கூறிவிட்டு, மேலே பேசாமல் அங்கு கூடி இருந்தோரையும், மணமக்களையும் பார்த்தபடியே சிறிது அமைதியாக நின்றார் துறவி.

அதைக் கண்ட மணமக்களும் மற்றையோரும் ஒன்றும் புரியாமல் விழித்தனர்!


அப்பொழுது அந்தத் துறவி, கதையை நிறுத்திய இடத்திலே இருந்து மீண்டும் தொடர்ந்தார்.

''பெறுதற்கரிய அரும் பெரும் இரு பிள்ளைகளைப் பெற்று, மழலை மிகும் பிள்ளைக் குறும்புச் சண்டையினால் பெரிதும் மகிழ்ந்து களிக்கும், அண்டங்கள் அனைத்தையுமே உண்டாக்கிக் காக்கும், அம்மை அப்பராகிய உமைபாகர் — மணமக்களாகிய உங்களை அருள் பாலித்து ஆசி வழங்கிக் காப்பாராக'' எனக்கூறி ஒரு வாழ்த்துப் பாவைப் பரிசாக வழங்கினார்.

இத்தகைய பெருமைக்குரிய அந்தத் துறவியின் பெயர்தான் **துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்** என்னும் அருள் பெரும் கவிஞர் ஆவர்! அவர் பாடிய அந்த அற்புத வாழ்த்துப் பாடல் இதோ!

அரனவன் இடத்தில் ஐங்கரன் வந்து
நின்று
'ஐய! என் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினான்' என்றே
சிணுங்கிடவும்
அத்தன் வேலவனை நோக்கி,
விரைவுடன் வினவவே, '' அண்ணன்
என் சென்னியில்
விளங்குகண் எண்ணினன்'' என;
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து,
''நீஅப்படி
விகடம்ஏன் செய்தாய்?'' என
மருவும்என் கைந்நீளம் முழம்அளந்தான்
என்ன;
மயிலவன் நகைத்து நிற்க—
மலைஅரையன் உதவவரும் உமையவளை
நோக்கி''நின்
மைந்தரைப் பாராய்!'' என;
கருதரிய கடல்ஆடை, உலகுபல
அண்டம்
கருப்பமாய்ப் பெற்ற கன்னி!
கணபதியை அருகழைத்து அகமகிழ்வு
கொண்டனள்;
களிப்புடன் உமைக் காக்கவே!





'ரிகார்'க்களுக்கு ஒரு புத்தகம்

● உடையாமல் ஒரு கோழி முட்டையை அதிகபட்சம் எவ்வளவு தூரம் எறிய முடியும் என்று உங்களுக்குத் தெரியுமா..?

● எரிந்து கொண்டிருந்த விமானத்திலிருந்து 33,330 அடி கீழே விழுந்து உயிர் பிழைத்த மனிதரின் பெயர் தெரியுமா..?

● உலகத்திலேயே மிகப் பழமையான கோயில் எங்கே இருக்கிறது?

● மிக அதிக காலம் ஜெயில் தண்டனை அனுபவித்த குற்றவாளி யார்...?

● உலகின் மிக உயரமான ஸ்தூபி எது..?


இப்படி உங்களைச் சில கேள்விகள் கேட்டால் உங்களால் சட்டென்று பதில் சொல்ல முடியாது. (இவற்றுக்குப் பதில் இந்தக் கட்டுரையின் முடிவில் இருக்கிறது) ஆனால், அப்படிப் பதில் சொல்லக் கூடியவாறு ஓர் அதிசய 'ரிகார்டுகள்' புத்தகத்தைத் தயார் செய்து வெளியிடுகிறார்கள். அதற்கு 'கன்னெஸ் அதிசய ரிகார்டுகள்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தகம் இந்த ஆண்டில் இருபது லட்சம் பிரதிகள் விற்றிருக்கிறது.


இந்த யோசனை எப்படி வந்தது..? ஸர் ஹுக் பீவர் என்ற, மது தயாரிக்கும் நிறுவனம் ஒன்றின் தலைவர், ஒருநாள் தோட்டத்தில் வேட்டையாடப்போனார். அங்கே அழகான பொன்னிற மைனா ஒன்று அவருடைய துப்பாக்கி குண்டில் சிக்காமல் பறந்து விட்டது. அந்த விதமான மைனா மணிக்கு எவ்வளவு மைல் வேகத்தில் பறக்கும் என்று தெரிந்து கொள்ள முயன்றார் பீவர். எங்கு தேடியும் குறிப்புகள் கிடைக்கவில்லை. பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தார். விளம்பரத்துக்குப் பதில் எழுதி அனுப்பிய கோரிஸ் — ராஸ் என்ற சகோதரர்கள், அவரை நேரிலும் காண வந்தார்கள். அதன் வேகம் மணிக்கு 62 மைல் என்பது தெரிந்தது. அதைப் போல நிறைய, வேடிக்கையான, வியப்பைத்தரும் 'ரிகார்டு'களைப் பற்றிய விவரம் அவர்களுக்குத் தெரியும் என்பதும் புரிந்தது. இதைப் போல் 'ரிகார்டு'களின் தொகுப்பாக ஒரு புத்தகத்தைத் தாமே தயாரித்து வெளியிட வேண்டும் என்று முடிவு செய்தார். தன்னுடைய நிறுவனத்தின் பெயரையே அந்தப் புத்தகத்துக்கு கொடுத்தார். இப்போது இருபத்மூன்று ஆண்டுகளாக இந்தப் புத்தகம் வெளிவந்து கொண்டிருக்கிறது.


முதல் வெளியீடு 1955—ம் ஆண்டு வெளிவந்தபோது 50,000 பிரதிகள் அச்சிட்டார்கள். அவ்வளவும் விற்றுப் போய் மூன்று தடவைகள் அச்சிட வேண்டியதாயிற்று. அந்த ஓர் ஆண்டிலேயே 1,87,000 பிரதிகள் அச்சிடப்பட்டு அவ்வளவும் விற்று விட்டன. இப்போது இந்தப் புத்தகத்துக்கு இருபதாவது வெளியீடு வெளிவந்திருக்கிறது. சுமார் ஏழு லட்சம் பிரதிகள் அச்சடித்திருக்கிறார்கள். அவற்றை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கினால் எவரெஸ்ட் சிகரத்தை விட இரு மடங்குக்கு மேல் உயரமாக இருக்குமாம்!


லண்டன் நகரின் வெளிப்புறத்தில் ஒரு சிறு கட்டிடத்தில் இந்த வெளியீட்டின் அலுவலகம் இருக்கிறது. பத்து பேர் மட்டுமே அங்கு வேலை செய்கிறார்கள். அது ஓர் ஆண்டுக்கு 'பதினெட்டு லட்சம் ரூபாய் லாபம்' சம்பாதிக்கிறது! இவ்வளவு சிறிய நிறுவனம் இவ்வளவு அதிகமான லாபம் சம்பாதிப்பதும் ஒருவேளை ஒரு 'ரிகார்டா'க இருக்கலாமோ என்னவோ...?

இந்த 'ரிகார்டு'கள் ஒவ்வோர் ஆண்டும் மாறலாம் அல்லவா...? அதனால் ஒவ்வொரு பதிப்பு வெளியாகும் போதும், முழுவதையும் சரிபார்த்துத் திருத்தி அமைக்கிறார்கள்.











உலகத்திலேயே மிக மிக நீளமான மீசை யாருக்கு இருக்கிறது? —இப்படி ஒரு குறிப்பு அந்தப் புத்தகத்தில் இருக்கிறது. இதைக் குறித்து அனுப்பிய மனிதரின் ஊருக்குப்போய் (இங்கிலாந்தில் இருக்கிறார். நீளம் 44 அங்குலம்), அந்த மீசைக்காரரைப் போலீஸ் அதிகாரியிடம் அழைத்துக் கொண்டு போய் அளவெடுக்கச்செய்து, சர்டிபிகேட் வாங்கி அப்புறம் பதிவு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு குறிப்பும் கச்சிதமாக, யாரும் தப்பு சொல்ல முடியாது என்பது போல் இருக்க வேண்டுமென்று கவனம் செலுத்துகிறார்கள்.

மிருகங்கள், பூமி நூல் விவரங்கள் ஆகியவை பொதுவாக அடிக்கடி மாறுவதில்லை. விண்வெளியில் கோள்களை அனுப்பி ஆராய்ச்சி செய்த பிறகு, பூமியின் விட்டம் சுமார் 36 கஜம் குறைந்திருப்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். சுமார் எட்டாயிரம் மைல்கள் நீளமுள்ள இந்த விட்டத்தின் அளவில் 36 கஜம் என்பது பிரமாதமான ஒன்று இல்லை. ஆனால், குறிப்பு — விவரம் என்று வரும்போது அலட்டிக் கொள்ள வேண்டி இருக்கிறது!

உலகெங்கும் 'க்விஸ்' நிகழ்ச்சிகளில் இந்தப் புத்தகம் உபயோகப் படுத்தப்படுகிறது. இந்தப் புத்தகத்துக்கு காபிரைட் எதுவும் இல்லை.

ஆனால் ''இந்த விவரம் எங்கிருந்து கிடைத்தது...?'' என்று கேட்பவர்கள் அதிசயப்படுகிறார்கள். ஆங்கிலம், பிரெஞ்சு, டேனிஷ், ஜெர்மன், நார்வேஜியன், ஜப்பானிய, இத்தாலிய, ஃபின்னிஷ், ஸ்வீடிஷ், டச்சு, செக் ஆகிய மொழிகளில் இது வெளியிடப் படுகிறது. அதிகமாக விற்பனையாவது ஜப்பானிய வெளியீடு. மிகக் குறைவாக விற்பது பிரெஞ்சு வெளியீடு.


மிக அதிகம், மிக வேகம், மிகநீளம் என்று உச்ச அளவுகளை மட்டும் இவர்கள் வெளியிடுவதில்லை. மிக மோசம், மிகக் குறைவு என்பதைக் கூட வெளியிடுகிறார்கள். உலகத்திலேயே மிகக் குறைவாக விற்கும் புத்தகம் எது...? ஆக்ஸ்போர்டு பதிப்பான பைபிளின் புதிய திருமறை புத்தகம்தான். நூற்றம்பது ஆண்டுகளில் இது சுமார் 500 பிரதிகள் விற்றிருக்கிறது!


சில 'ரிகார்டு'களை இவர்கள் விரும்புவதில்லை. மிக அதிகமான அளவு சாப்பிடுவது போன்ற ரிகார்டுகள் இவை. இவற்றை ஒழுங்காகப் பதிவு செய்ய முடிவதில்லை. நிரூபணம் தேவை என்று சொன்னால், பலவித வகைகளோடு, அலுவலகத்துக்கே வண்டியில் வந்து இறங்கிச் சாப்பிடத் தொடங்கி விடுகிறார்கள்! இந்தப் பிரச்னையைச் சமாளிக்க, கூடியவரை சாப்பாட்டு ரிகார்டுகளின் பக்கத்தில் இவர்கள் போவதில்லை. உபயோகமில்லாத ரிகார்டுகளையும் இவர்கள் சேர்த்துக் கொள்வதில்லை. 'சளைக்காமல் ஒரு நாணயத்தை எவ்வளவு தடவைகள் சுண்டிப் போட்டுப் பிடிக்கலாம்..?'' என்று கேட்டு 'ரிகார்டை'யும் குறிப்பிட்டு ஒருவர் எழுதி இருந்தார். அவர்கள் அதைப் பொருட்படுத்தாமல் விட்டு விட்டார்கள்.

ஓர் ஆண்டுக்கு இவர்களுக்குச் சுமார் பத்தாயிரம் கடிதங்கள் வருகின்றன. அவ்வளவையும் ஒன்று விடாமல் படிக்கிறார்கள். பரிசீலனை செய்து பதில் எழுதுகிறார்கள். மிகவும் பயனுள்ள குறிப்புகள் சில சமயம் எதிர்பாராத இடங்களிலிருந்தும் கூட வருகின்றன. உதாரணமாக, மிகவும் அதிக நிறையுள்ள ஒரு பொருள் எது என்பதைச் சிறைச்சாலையிலிருந்து ஒருவர் எழுதி அனுப்பி இருந்தார். கொலைக் குற்றத்துக்காகச் சிறை வாசம் செய்யும் அவர் ஒரு மிகச் சிறந்த கணித நிபுணர் என்று தெரிய வந்தது.!

சுமார் 320 பக்கங்கள் கொண்ட 'கின்னெஸ் ரிகார்டு புத்தகம்' சுமார் இருபத்தைந்து ரூபாய் விலைக்குக் கிடைத்திருக்கிறது. மிக அதிக அளவு வேலைகள் தேவைப்படுவதால் அச்சுகோப்பது முதற்கொண்டு எல்லா







வற்றுக்கும் கம்ப்யூட்டரை உபயோகப் படுத்த வேண்டியிருக்கிறது. சில சமயம் இந்தக் கம்ப்யூட்டரே வேலை செய்ய முடியாமல் திணறிப் போய் விடுவதுண்டு. உலகத்தில் மிக நீளமான பெயர் கொண்ட 'ரசாயனப் பொருள் ஒன்றைக் குறிப்பிட வேண்டியிருந்தது. இந்தப் பெயரில் 1912 எழுத்துக்கள் இருந்தன. கம்ப்யூட்டர் கையை விரித்து விட்டது!

'கின்னெஸ்' ரிகார்டு புத்தகத்தின் துணைப் பதிப்புகளாக, வெவ்வேறு புத்தகங்களும் இப்போது வெளியாகத் தொடங்கியுள்ளன. கார், ரயில், ஆகாயவிமானம், போர் ஆயுதங்கள், வீட்டுச் சாமான்கள் என்று ஒவ்வொன்றுக்கும் தனியாக, நிறைய பயனுள்ள விஷயங்களை, விரிவாகத் தொகுத்து வெளியிடப் போகிறார்கள்.

அவர்கள் வெளியீடுகளில் ஒரு முக்கியமான வாசகத்தை அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு. 'நேற்று என்ன நடந்தது..? என்று நாங்கள் கவலைப்படுவதில்லை. நாளைக்கு என்ன வரப்போகிறது என்றும் நாங்கள் சிந்திப்பதில்லை. இன்று நடப்பது என்ன என்பதை உங்கள் காதில் போடுவதுதான் எங்கள் கவலை, சிந்தனை, நோக்கம் எல்லாமே..!'' என்கிறார்கள் அவர்கள்.

கட்டுரையின் ஆரம்பத்தில் சில கேள்விகள் கேட்டிருந்தேன் அல்லவா? அவற்றுக்குப் பதில்களை இதோ கொடுத்திருக்கிறேன். ரொம்பச் சுலபமாகச் சொல்லி விட்டேன். 'கின்னெஸ்' புத்தகத்தில் கண்டுபிடிக்க இரண்டு நிமிடங்கள்தாம் ஆயிற்று...!

● அதிக தூரம் உடையாமல் எறியப்பட்ட கோழி முட்டை:

''303 அடி ஆறு அங்குலம். எறிந்தவர் பின்லாந்தைச் சேர்ந்த ரௌளி ராபோ என்பவர். தேதி அக்டோபர் 28–1971.

● அதிக உயரம் விமானத்திலிருந்து குதித்து உயிர் தப்பியவர்:

வெஸ்னு வெல்வாயிக் என்ற விமான பணிப்பெண். தேதி – ஜனவரி 26–1972.

● உலகிலேயே மிகப் பழைமையான கோயில்:


இஸ்ரேலில் ஜெரிக்கோவில் உள்ள கோயில். கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 9000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது.

● உலகிலேயே மிக நீண்ட சிறை வாசத் தண்டனை:

இரண்டு இரானிய மோசடி குற்றவாளிகள். 1969–ம் ஆண்டு தண்டிக்கப்பட்ட இவர்களுக்கு, இவர்கள் செய்த குற்றங்களுக்காக மொத்தம் 7109 ஆண்டுகள் சிறைவாசத் தண்டனை விதிக்கப்பட்டது.

● உலகின் மிக உயரமான ஸ்தூபி.

டில்லியின் அருகில் உள்ள 'குதுப் மினார்'. உயரம் 238 அடி. -'செல்வி'



பரந்து விரிந்த விண்வெளியில் பூமியுருண்டை அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பெரிய உருண்டையைப் பிடித்துத் தராசில் வைத்து எடை என்னவென்று கணிக்க இயலுமா..? இயலாது. இருப்பினும், பூமியின் எடை என்னவென்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது எண் 66–க்குப் பிறகு இருபது பூஜ்யங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். ஆக பூமியின் எடை 6,600,000,000,000,000,000,000 டன் (6,600 ட்ரியன் டன்)

இந்த எடையை விஞ்ஞானிகள் எப்படிக் கண்டுபிடித்தார்கள்? புவியீர்ப்புத்தானத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியுமல்லவா. ஈர்ப்புச் சக்தி எல்லாப் பொருட்களுக்கிடையிலும் செயல்படுகின்றனதென்ற உண்மையின் அடிப்படையில் பூமியின் எடை கணிக்கப்பட்டது. பெரிய பொருட்கள் சிறியவற்றை இழுக்கின்றன. அதேபோல், இரு பொருட்களின் இடையே உள்ள தூரம் அதிகமாக இருக்கும்போது ஈர்ப்புச் சக்தி குறைவாக உள்ளது.

சிறு எடையுள்ள ஒரு பொருளை நூலினால் கட்டித் தொங்கவிடுங்கள். அதனருகில் ஒரு டன் எடையுள்ள ஈயத்தைக் கொண்டு வாருங்கள். ஈர்ப்பு சக்தியினால் சிறு பொருள் முன்னிருந்த இடத்தை விட்டுச் சிறிது நகரும். அப்படி அது நகரும் தூரம் எவ்வளவு தெரியுமா..? 1/1000000 அங்குலம். இந்த அளவினைக் கொண்டு, பூமியின் மொத்த கன பரிமாணத்தினின்று பூமியின் எடை கணிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம் : வைக்கிங் என்சைக்ளோபீடியா — வி. உஷா

பாபா சொன்ன பாப்பாக் கதை

ரா. கணபதி



ஸ்ரீராமரைவிட்டு க்ஷணகாலமும் பிரியாதவர் ஹநுமார். ராமருக்குப் பட்டாபிஷேகம் ஆனபின் ஸுக்ரீவன் முதலான மற்ற வானரர்கள் கிஷ்கிந்தைக்குத் திரும்பிய போதிலும், ஹநுமார் மட்டும் அயோத்தியிலேயே ராமபிரானுடன் தங்கியிருப்பதற்கு ராமருடைய சம்மதத்தைப் பெற்றுவிட்டார்.

மற்ற வானரங்கள் விடைபெற்ற போது மரியாதையை உத்தேசித்து ஆஞ்சநேயர் அவர்களை வழியனுப்பக் கோட்டை வாயில் வரை சென்றார்.

அச்சமயம் ஸ்ரீராமரைச் சூழ்ந்திருந்த ஸீதாதேவி, லக்ஷ்மணர், பரதர், சத்ருக்னர் ஆகியோர் "அப்பாடா..! மாருதி இல்லாமல் தங்களோடு இப்போதுதான் நாங்கள் தனித்திருக்கிறோம்" என்று ஸந்தோஷத்துடன் கூறினர்.

"என்னுடைய பரம பக்தனை ஹநுமான் உடன் இல்லை என்பதில் உங்களுக்கெல்லாம் ஏன் இத்தனை மகிழ்ச்சி?" என்று ஸ்ரீராமச்சந்திரர் ஏதும் தெரியாதவர்போல் வினவினார்.

"அவன் பரமபக்தன்தான். அதனால் அவனுக்குத் தேவரீர் மனத்திலிருப்பதெல்லாம் சொல்லாமலே தெரிந்து விடுகிறது. எதையும் செய்து முடிக்கும் அபார காரியத்திறனும் அவனுக்கே உள்ளது. ஆதலால் தேவரீரின் ஸகல தேவைகளையும் அவனே உணர்ந்து அவன் ஒருத்தனாகவே அத்தனை தொண்டுகளையும் புரிந்து விடுகிறான். இதனால் ஏனையோரான எங்களுக்குத் தேவரீருக்குப் பணிவிடை புரியும் சேவா பாக்கியமே கிடைப்பதில்லை. இப்போது அது கிடைத்திருக்கிறதே என்று தான் மகிழ்ச்சி கொள்கிறோம்" என்று ஸீதாப் பிராட்டி கூறினார்.

"ஓஹோ..! அவ்வாறெனில் ஒரு காரியம் இப்போதே பண்ணிவிடுங்களேன்" என்றார், ஆஞ்ஜநேயரின் பக்திப் பெருமையை உலகுக்கெல்லாம் காட்ட விரும்பிய ராமமூர்த்தி.

"மாருதி இங்கேயில்லாத இச்சமயத்திலேயே எனக்குச் செய்ய வேண்டிய, செய்யக்கூடிய எல்லாப் பணிவிடைகளுக்கும் விரிவாக, நுணுக்கமாக ஒரு பட்டியல் போட்டுவிடுங்கள். அவற்றில் இன்னின்னவற்றை உங்கள் நால்வரில் இன்னின்னவர் செய்ய வேண்டும் என்றும், தொழிற்பங்கீடு செய்து கொண்டு விடுங்கள். நான் அதற்கு அங்கீகாரம் தந்து விடுகிறேன். ஆஞ்ஜநேயன் திரும்பிய பின் நான் இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புதல் தந்து விட்டேன் என்பதால், இதை ஆக்ஷேபித்து மூச்சுக் கூட விட மாட்டேன்" என்றார் ராகவப் பெருமான்.

ஸீதா, லக்ஷ்மண, பரத, சத்ருக்னருக்கு மட்டற்ற மகிழ்ச்சியாயிற்று.

"கிடைத்தது வாய்ப்பு! கடந்த சில காலமாக நமக்குப் பிரபுவின் சேவை ஏதுமே இல்லாமற் செய்து வந்த மாருதிக்கு இனி அத் தொண்டில் பங்கே இன்றி, நாம் நால்வருமே பகவான் காரியங்கள் முழுதையும் நமக்குள் பகிர்ந்து கொண்டு விடுவோம்" என்று உற்சாகமடைந்தனர்.

ஸ்ரீராமருக்கு வெண்கொற்றக் குடை பிடிப்பது, சாமரம் போடுவது, விசிறுவது; மற்றும் பொழுது விடிந்ததும் அவரைச் சயனத்திலிருந்து கைலாகு கொடுத்து எழுப்பிப் பல் விளக்க அழைத்துச்செல்வதிலிருந்து, அவருக்கு நீர் மொண்டு தருவது, நீராட்டுவது, உடுப்பு அணிவிப்பது, மணை போடுவது அவர் புரியும் பூஜைக்கான பல சுற்றுக்



காரியங்களைச் செய்வது, உணவிடுவது, தாம்பூலப் பெட்டி தாங்கி நிற்பது, சமயமறிந்து அவருக்குப் பாதுகை சமர்ப்பிப்பது, அப் பாதுகையை அவர் கழற்றும் போதெல்லாம் உடனுக்குடன் எடுத்து வைத்துக் கொள்வது- என்றிப்படியாக, ஒருநாள் முழுவதும் செய்யக் கூடிய நூற்றுக் கணக்கான சிறிய, பெரிய பணிகள் எதுவும் விட்டுப் போகாமல் நால்வரும் சேர்ந்து ஒரு நீண்ட பட்டியல் தயார் செய்தனர்.

இந்தக் காரியங்கள் யாவற்றையும் தாங்களே செய்து விடும்படியாகத் தமக்குள் பிரித்துக் கொண்டும் விட்டனர்.

ஸ்ரீராமர் விஷமப் புன்னகையுடன் இந்த ஏற்பாட்டுக்கு அங்கீகாரம் கொடுத்து, அந்தப் பட்டியலின் கீழ் கையெப்பம் இட்டு விட்டார்!

மாருதி திரும்பினார்.

ஸ்ரீராமர் அவரைக் கண்டவுடன் புன்னகைத்து, ''நாயனா! இதுவரை நீ எனக்கு ஓயாமல் ஒழியாமல் பணி புரிந்து விட்டாய் அல்லவா..? இதற்கு ஈடாக இனிமேல் உனக்கு ஒரே ஓய்வு தான்'' என்றார்.

ஆஞ்ஜநேயர் ஓய்வையா வேண்டினார்...? அனவரதமும் பகவானுக்குத் தொண்டு செய்யும் 'கைங்கர்ய ஸ்ரீ' என்பதையே நாடியவரல்லவா அவர்? எனவே ஐயன் இவ்விதம் கூறியதும் அவர் நெருப்பை மிதித்தாற் போல் பதறி விட்டார்.

''ப்ரபோ!. நான் என்ன குற்றம் செய்தேனென்று என்னைப் பணிவிடை

யிலிருந்து ஒதுக்கி விட்டீர்கள்?'' என்று அலறினார்.

ராமர் கருணையுடன், மிகவும் இனிமையாக, ''நாயனே! நீ குற்றம் எதுவும் செய்யவில்லை. எனவே தண்டனையாக நான் இவ்விதம் செய்யவில்லை. நீ வெளியே போயிருந்த போது இந்த நால்வரும் எனக்காக அத்தனை கைங்கரியங்களுக்கும் பட்டியல் போட்டு, அவற்றைத் தங்களுக்குள்ளேயே பிரித்துக் கொண்டு விட்டனர். நானும் போதிய ஆலோசனை செய்யாமல் அதை ஒப்புக்கொண்டு ஒப்பமிட்டு விட்டேன். ஸ்வாமி சொன்ன சொல் மீறுவதே இல்லை அல்லவா? ஆகையால் ஸ்வாமி ஸத்தியஸந்தராக இருக்கவேண்டுமென்றால் நீயும் இதை எதிர்க்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். என்ன சொல்கிறாய்?'' என்றார்.

ஆஞ்ஜநேயருக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. தமக்குப் பணிவிடைப் பேறு போகிறதே என்று எல்லையில்லாத தாபம் உண்டாயிற்று. ஆயினும் தம் பொருட்டு ஸ்வாமி வாக்கை மீறிய தோஷத்துக்கு ஆளாகக் கூடாது என்ற உயர்ந்த தியாக புத்தியும் அவருக்கு இருந்தது.

எனவே, ''பிரபு! தங்கள் சம்மதத்தைப் பெற்றுவிட்ட ஓர் ஏற்பாட்டை அடியேன் எதிர்க்கவே மாட்டேன். ஆயினும் ஒரு வேண்டுகோள். தயை கூர்ந்து அப்பட்டியலைத் தாங்கள் படித்தருளுவீர்களா..? அதில் ஏதேனும் ஓர் அற்பப் பணி விட்டுப் போயிருக்குமாயின், அற்பரில் அற்பனான அடியேன் அச் சிறுபணியை ஏற்பேன்'' என்றார்.

ராமரும், மற்ற நால்வரும் இதைக் கேட்டுச் சிரித்தனர். எவ்வளவோ கவனத்துடன் அவர்கள் யோசித்து யோசித்து, எடுத்த பட்டியலிலும் ஒரு பணி விட்டுப் போயிருக்கலாம் என்று இந்த அசட்டு ஆஞ்ஜநேயன் எதிர்பார்க்கிறானே என்றுதான் சிரித்தனர்.

''அப்பா மாருதி! பார்த்துப் பார்த்துப் போட்ட இப்பட்டியலில் எதுவுமே விட்டுப் போனதாக எங்களுக்குத் தெரியவில்லை. இருந்தாலும் பாவம், உன் திருப்திக்காகப் படிக்கிறேன்'' என்று கூறிய ராமசந்திரர் பட்டியலைப் படிக்க ஆரம்பித்தார்.

சின்னச் சின்னப் பணிகள் உட்பட ஒவ்வொன்றாக அவர் படிக்கப் படிக்க ராமதாஸ திலகனான ஆஞ்ஜநேயருக்கு, ''ஐயோ! இத்தனை நாள் நாம் செய்து வந்த இந்தச் சேவைகளான ரத்தினங்கள் ஒவ்வொன்றும் கொள்ளை போய் விட்டதே'' என்று ஆதங்கமாக இருந்தது. இருந்தாலும் நம்பிக்கையை விடாமல் கேட்டுக் கொண்டே வந்தார்.

ஸ்வாமி முழுதும் படித்து முடித்தார். ''பார்! இதற்கு அதிகமாக நீ செய்யக்கூடிய பணி என்ன இருக்கிறது?'' என்று ஹநுமாரை அவர் கேட்பது போல் குறிப்பாகப் பார்த்தார்.

''மாருதி கோட்டை விட்டான்'' என்ற பெருமை முகத்தில் பிரதிபலிக்க மற்ற நால்வரும் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆ ச் ச ரி ய ம்! வாடித் தொங்க வேண்டிய ஹநுமாரின் முகத்தில் ஒரு பிரகாசம் ஏற்பட்டது.



''பட்டியல் அவ்வளவுதானு...?'' என்று கும்மாளமிட்டுக் கேட்டார் மாருதி.

''அவ்வளவுதான்! இதற்கு மேல் என்ன இருக்கிறது?'' என்ருர் அனைத்தும் அறிந்தும் ஆட்டம் போடும் ஸ்வாமி.

''ஒன்று மீதமிருக்கிறது, பகவானே என்ருர் மாருதி. ''அதை நான் செய்ய லாமல்லவா..?'' என்று கேட்டார்.

''ஓ! தாராளமாக'' என்று கூறிய ஸ்ரீராமர் மற்ற நால்வரையும் பார்த்தார்.

''எங்கள் பட்டியலில் எந்தப் பணியும் விடுபட்டிருக்கும் என்று எங்களால் நம்பமுடியவில்லை. ஆனுல், அப்படி ஏதேனும் ஒன்றை ஆஞ்ஜநேயன் உண்மையாகவே எடுத்துக் காட்ட முடிந்தால், அதைத் தாங்கள் அவனுக்சே கொடுக்கலாம்'' என்று அவர்கள் ஒருமுகமாகக் கூறினுர்.

''விட்டுப்போன பணியைச் சொல்கிறேன்'' எனக் கூறிய மாருதி தொடர்ந்தார்: ''ஒருவர் கொட்டாவி விடுவதால் தோஷம் ஏற்படுவதாக சாஸ்திரம் சொல்கிறது. இந்த தோஷம் நிவிருத்தி ஆவதற்கு அவர் கொட்டாவி விட வாய் திறக்கும் போது வாயின் முன் 'சொடக்குப்' போட்டுக் கொள்ள வேண்டும் என்றும் சாஸ்திரத்தில் பரிகாரம் கூறப்பட்டிருக்கிறது. மஹாராஜாதி ராஜஞன ஸ்வாமீ தாங்கள் கொட்டாவி விடுகையில் தாங்களே சொடக்குப் போட்டுக் கொள்வது தங்களது உயர்ந்த ஸ்தானத்துக்குத் தகாதல்லவா? இதனையும் தங்கள் பணியாட்களே யல்லவா புரிவது முறை? கொட்டாவிக்குச் சொடக்குப் போடுவதான இந்தப் பணிதான் பட்டியலில் விடுபட்டு விட்டது!'' என்ருர் ஹநுமார்.

ஸ்ரீராமர் மட்டுமின்றி மற்ற நால்வரும்கூட இதனைக் கேட்ட மாத்திரத்தில் ''ஆஹா, ஆஹா..!'' என்று பாராட்டினர். இந்தச் சொடக்குப் பணி உள்பட அனைத்துச் சேவைகளையும் அதுநாள்வரை அஞ்ஜனுபுத்திரனே கவனித்துக் கவனித்து ஸ்ரீராம சந்திர மூர்த்திக்குச் செய்து வந்திருக்கிருர் என்ற மகத்தான உண்மையை இதிலிருந்து அவர்கள் தெரிந்து கொண்டு அவரிடம் மனமார்ந்த மதிப்புக் கொண்டனர்.

''ப்ரிய மாருதி! இந்த வேலையை உனக்கே அளித்தேன். ஆனுல், இது வாஸ்தவத்திலேயே உனக்குத் திருப்தி தருகிறதா..? எப்படித் தர முடியும்? அஸாத்தியமான அரிய பெரிய பணிகளைச் செய்ய வல்லவன் நீ. எனக்காகக் கடலையே ஒரு தாவில் தாண்டிச் சென்றவன் நீ. என்னை ஒரு தோளிலும், லக்ஷ்மணனை இன்னெரு தோளிலும் தூக்கிச் சென்றவன் நீ. அப்பேர்ப்பட்ட உனக்குக் 'கொட்டாவிச் சொடுக்கு' என்ற இந்த வெகு வெகு சிறிய கைங்கரியத்தைச் செய்வதில் எப்படி மனநிறைவு ஏற்படமுடியும்?'' என்ருர் ராகவர். மாருதியின் மறுமொழி மூலம் மேலும் ஒரு பேருண்மையை மற்ற நால்வருக்கும், உலகத்தினருக்கும் தெரிவிக்கும் பொருட்டே இப்படிக் கேட்டார்.

ஆஞ்ஜநேயர் ஸீதா ராமர்களுக்கு ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, அடக்கத்துடன் கைகூப்பிச் சொன்னுர்:

''ஸ்வாமி! இந்த உலகத்தில் எத்தனையோ லக்ஷம் பணிகள் இருக்கின்றன. அவை யாவும் நடந்துதானுக வேண்டும். எனவே, அவற்றில் 'இது உயர்ந்தது, இதைச் செய்தாலே நமக்குப் பெருமையும் புகழும் உண்டாகும்' என்று சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுப்பதும், இவ்வாறு பெயரும் புகழும் தராதனவற்றை ஒதுக்குவதும் முறையாகாதே! அற்பமாயினும் சரி, சொற்பமாயினும் சரி எந்தப் பணி ஒருவருக்கு வாய்த்தாலும் அதையே அந்தரங்க சுத்தமாக, அப்பழுக்கில்லாமல் ஆற்றினுல் நீ மகிழ்ச்சியடைந்து மனத்தூய்மையை அருளி விடுவாயே..! முழுமனமின்றிப் பெரும் பணிகள் செய்வோரைவிட, முழு மனத்துடன் சிறிய பணிகளைப் புரிவோரிடமே பிரீதி கொள்பவனல்லவா நீ!

''இன்னென்று பிரபு! நான் ஏதேதோ பெரிய காரியங்கள் செய்ததாகத் தேவரீர் கூறியது அடியேனைச் சோதிப்பது போல் அல்லவா உள்ளது? உண்மையில் அவற்றைச் செய்தது நினது கருணையே அல்லவா..? அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்றபடி நின் சக்தியாலேயே அன்ருே உலகில் ஸகல காரியங்களும் நிகழ்கின்றன..?''

''உண்மையில் அனைவரது காரியத்திறனும் நின்னிடமிருந்து வருவதே. ஆகையால் நீயே செய்து கொள்ளும் காரியங்களுக்குத் தான் நாங்கள் கருவியாய் இருக்கிருேம். மநுஷ்யனுக அவதாரம் செய்துள்ள நீ பற்பலர் பல விதப் பணி செய்தே உனது வாழ்வு உருவாவது போல் ஒரு நாடகம் நடிக்கிருய். அதனுல்தா:ன் அந்த நாடகத்தில் ஒரு பங்கு கேட்டேன். உண்மையில் உனக்காக நாங்

ஆனைமுகத்தன் அன்னை
ஞான அமு(து) உவந்த
மோனக் குழந்தை யிவன்
ஞானசம் பந்தன்! தானோ?



புகைப்படம்: புஞ்பத்துறை சுப்பிரமணியம்

கள் செய்ய வேண்டுவது யாதொன்று மில்லை. ஸத்ய தர்ம ஸ்வரூபமான உன்னை வெறுமே தரிசனம் செய்து கொண்டிருந்தாலே பரம புண்ணியம். அதுவே போதுமானது. ஆனால், இந்த மனித வேஷ விளையாட்டிலோ ஏதேனும் பணி இருந்தால்தான் உன்னை ஒருவர் சும்மாச் சுற்றி வர நீ அநுமதிப்பாய். அதற்காகவேதான், நான் சேவையைக் கோரினேனே யன்றி, உண்மையில் எங்கள் பணி நினக்கு அவசியம் என்ற தவறான எண்ணத்தில் அல்ல.

''ஸ்வாமீ! மற்ற எல்லாப் பணிகளையும் விட இந்தச் சொடக்குப் பணியே மிகவும் ஏற்றதாக உள்ளது. கடலைத் தாண்டியது இதைவிட எவ்வளவோ பெரிய தொண்டாக இருக்கலாம். ஆனால், அப்போதும் உன் ஸமீபத்தை இழந்து, உன்னைப் பிரிந்தே நான் இருக்கும்படி இருந்தது. ஏன், உன்னை என் தோளிலேயே தாங்கிய போதுகூட, மூவுலகங்களையும் கவரும் உன் திருமுக தரிசனம் எனக்குக் கிடைக்கவில்லைதானே? உனது ஸ்நானம், அலங்காரம், உணவு, ஊர் உலா, தர்பார் பிரவேசம் முதலியவை குறித்த பணிகள் எனக்குக் கிட்டினாலும் அநேக சந்தர்ப்பங்களில் நான் உன் பக்கத்திலேயே இருக்க முடியாமல் பிரிந்து சென்று செயலாற்ற வேண்டியிருக்கும். ஆனால், இந்தச் சின்னஞ் சிறிய 'கொட்டாவிச் சொடக்கு'ப் பணியோ ஸதா ஸர்வகாலமும் நான் உன்னை விட்டு நீங்காதபடி உன் பக்கலிலேயே என்னை வைத்து விடுகிறது!

''ஆம், பிரபு! எந்த விநாடி வேண்டுமாயினும் ஒருவருக்குக் கொட்டாவி உண்டாகலாம் அல்லவா..? அப்படி நீ வாய் திறந்த மாத்திரத்தில் எதிரே சொடக்குப் போட நான் எப்போதும் தயாராகப் பக்கத்திலேயே இருந்தால்தானே முடியும்?'' 'நீ எப்போது கொட்டாவி விடுவாயோ..?' என்று எப்பொழுதும் உன் திவ்யத் திருமுகத்தையே கவனித்துக் கொண்டிருக்கும் மகத்தான பாக்கியம் இந்தப் பணியினாலேயே எனக்குக் கிடைக்கிறது. இந்த ஸதா காலத் திருமுக தரிசனம் ஏனைய சேவைகளைச் செய்கிற எவருக்குமே கிடைக்க முடியாதது அன்றோ..? தருவதாகச் சொல்லியே, சற்றும் எனக்கு ஓய்வு தருவதாகச் சொல்லியே சற்றும் கவனக் குறைவாக இருக்க முடியாத புண்ணியப் பணியை அருளி விட்டாய்!

''ஸ்வாமீ! மனித வேஷப்படி நீ கொட்டாவி விட்டாயாகிலும், உண்மையில் ஸ்வாமியாகிய நீ உறங்குவதே இல்லை. நீ உறங்கினால் உலகமே செயலற்று நின்று விடுமே! எனவே இரவிலும்கூட நீ தூங்குவதில்லை. நீ தூங்கப் போவது போல் ஒரு நாடகம் நடிக்கிறாய் என்பதை நான் அறிவேன். எனவே, இரவிலும்கூட உறங்காமலே உறங்கி நாடகமாடும் உன்னிடமிருந்து பொய்க் கொட்டாவி வெளியாகக் கூடும் என்று எதிர்பார்த்து அப்போதும் உன் அருகிலேயே இருக்கும் பேற்றினைப் பெறுகிறேன்.

''ஸர்வம் ராம மயம். பற்பல உருவங்களில் உள்ள எல்லா வஸ்துக்களும் உண்மையில் நீயேதான். ஆயினும் எதனாலோ, மரகதவர்ணனாக, கோதண்டபாணியாக (வில்லேந்திய கையனாக), ராஜீவலோசனனாக (தாமரைக் கண்ணனாக) உள்ள இந்த உன் ரூபத்திலேயே அடியேனுக்கு அளவிலா மோஹத்தை உண்டு பண்ணி,விட்டாய்! ஒரு நொடியும் விடாமல் எனக்கு உனது அமுத தரிசனத்தைத் தர வேண்டுமென்றே, இந்த நான்கு மஹாத்மாக்களை, திவ்யாத்மாக்களைக் கொண்டு இப்படி ஒரு திட்டம் புனைந்த நிலைக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்'' என்றார் மாருதி.

ஸ்ரீராமபிரான் பிரஸன்ன முகத்துடன் அமர்ந்திருக்க, ஸீதாப் பிராட்டியும் பரதாழ்வாரும் இலக்குமண ஸ்வாமியும் சத்ருக்னரும் உளம் நிறைந்து ''ஜெய் ஹநுமான், ஜெய் ஹநுமான்'' எனப் போற்றினர்.





தபால் தலை

● தபால் தலைகளுக்கு 'தபால்தலை' என்ற பெயர் எதனால் ஏற்பட்டது தெரியுமா...? முதன் முதலில் தபால் தலை புழக்கத்தில் வந்தபோது, அப்போது பிரிட்டனை அரசாட்சி செய்து வந்த விக்டோரியா மகாராணியாரின் உருவப்படத்தைத் தபாலின்மீது ஒட்டுவதற்காக அச்சிட்டார்கள். இதுபோல் மற்ற தேசங்களிலும் அந்நாட்டுத் தலைவர்களின் படங்கள் தபால் தலைகளாக வந்ததால் தபாலில் இடம் பெறும் — 'தலை' என்பதன் சுருக்கமாக இப் பெயர் ஏற்பட்டது.

● இந்தியாவில் முதன் முதலில் அச்சிட்ட தபால் தலை, 1854—ம்ஆண்டு விக்டோரியா மகாராணியாரின் உருவப் படத்துடன் வெளியிடப் பட்டதாகும்.

● நமது தீபாவளிப் பண்டிகையைத் தபால் தலையில் வெளியிட்டதைப் போல் வெளியிட்ட மற்றொரு நாடு சிங்கப்பூர்.

● ஒரே ஒரு நாட்டின் தபால் தலையில் அந்நாட்டின் பெயரும், விளக்கமும் தமிழ் மொழியில் எழுதப் பட்டிருக்கும். அது எந்த நாடு தெரியுமா...? இலங்கை (ஸ்ரீலங்கா)

● கீழ்க்கண்ட ஐந்து மேதைகளும், தங்களின் உருவப்படத்தை, தாங்கள் உயிருடன் உள்ளபோதே தபால் தலைகளில் காணும் பேறு பெற்றவர்கள்.

1) டாக்டர் டோன்டோ கேசவ கார்வே.
2) டாக்டர் விசுவேசுவரய்யா.
3) டாக்டர் ராஜேந்திர பிரசாத்.
4) டாக்டர் ராதாகிருஷ்ணன்.
5) முன்னாள் ஜனாதிபதி வி.வி.கிரி.


● பழம் பெரும் இலக்கியமேதையின் படம் கிடைக்காததால், அவரது இலக்கியப் படைப்புக்களிலிருந்து நம் அரசு இரண்டு காட்சிகளைத் தபால் தலையில் வெளியிட்டது. அந்த மாமேதை யார் தெரியுமா? மகாகவி காளிதாஸர்.

● 15—8—1947—ல் விடுதலை விழாவன்று வெளியிடப்பட்ட மூன்றரை

பழக்கத்தின் வலிமை!



ஸர் வால்டர் ஸ்காட், புகழ் பெற்ற எழுத்தாளர் என்று உங்களுக்கெல்லாம் தெரியும். வரலாற்று நவீனங்கள் எழுதுவதில் வல்லவர். இவர் சிறுவனாக இருக்கும் போது பள்ளியில் தாமே முதல்வனாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால், அதற்கு வேறொரு மாணவன் எப்பொழுதும் போட்டியாக இருந்து வந்தான். ஆசிரியர் எப்பொழுது என்ன கேள்வி கேட்டாலும் அவன் உடனுக்குடன் சரியான விடை சொல்லி வகுப்பில் முதல்வனாக விளங்கி வந்தான். ஆசிரியரின் அன்புக்கு உகந்த மாணவன் ஸ்காட். அவருக்கும் தம் அபிமான மாணவன் முதலாவதாக





குறிப்புகள்

அணு தபால் தலையில் நமது தேசியக் கொடி அதன் மூன்று நிறங்களுடன் பொறிக்கப்பட்டிருந்தது.

● தபால்தலைகளில் இந்த மூன்று தமிழ்க் கவிகள் இடம் பெற்றுள்ளனர். திருவள்ளுவர், பாரதியார், கம்பர்.

● தபால் தலையில் தன் பெயரை வெளியிடாத நாடு இங்கிலாந்து.

● மனிதன் சந்திரனில் இறங்கியதற்கு அடையாளமாக வெளியிடப்பட்ட அமெரிக்கத் தபால்தலையே விற்பனையில் அதிக வசூலைத் தந்துள்ளது.

● தபால் தலை வடிவத்தை வட்ட வடிவமாக வெளியிட்ட நாடு மலேஷியா.

● மணம் வீசும் தபால்தலையை வெளியிட்ட நாடு 'தென் ஆப்பிரிக்கா'

● சமீபத்தில் 'பிரிட்டிஷ்கயானு நாட்டுத் தபால்தலை ஒன்று அமெரிக்காவில் ஏலம் விடப்பட்டது. ஏழு லட்சம் ரூபாய்க்கு விலை போனது.

● தபால் தலைகளைச் சேர்த்த அமெரிக்க ஜனாதிபதி யார் தெரியுமா? ரூஸ்வெல்ட்.

(15) கீழ்க்கண்ட நாடுகள் தங்கள் நாட்டுத் தபால் தலைகளில் தங்கள் நாட்டுப் பெயரை வேறுவிதமாக வெளியிடுகின்றன. அப்பெயர்கள் தெரியுமா...?

1.	சோவியத் யூனியன்	சி.சி.சி.பி.
2.	ஜப்பான்	நிப்பன்
3.	சுவீடன்	சவீரேஜ்
4.	நார்வே	நார்ஜ்
5.	சுவிட்சர்லாந்து	எல்விட்டியா
6.	போலந்து	போல்ஸ்கா
7.	ஆஸ்திரியா	ஆஸ்டர்
8.	ஹங்கேரி	மகாயர்.

தொகுப்பு : உதகைநாதன்.

○ ★ ○

பிரிட்டனின் புகழ்பெற்ற குதிரைகள் தபால் தலையில் இடம் பெற்றுள்ளன. மேலே காணப்படும் அழகும், கம்பீரமும் கொண்ட இக்குதிரைகளின் படங்களைத் தாங்கிய ஸ்டாம்புகளை இங்கிலாந்தில் இம்மாதம் 5ந் தேதி வெளியிடுகிறார்கள்.

படம் உதவி: பிரிட்டிஷ் செய்தி இலாகா

வரவில்லையே என்ற தாபம் இருந்தது. அந்த மற்றொரு மாணவனை ஒரு முறையாவது மடக்கித் தோல்வியுறச் செய்தால்தான், வால்டர் அவனுடைய முதல் இடத்தைக் கைப்பற்ற முடியும்.

அந்த மாணவனுடைய பாவனைகளையும், பழக்க வழக்கங்களையும் வால்டர் கவனித்து வந்தான். அவன் கேள்விகளுக்கு விடை சொல்ல எழுந்திருந்ததும், தன் சட்டையிலிருந்த ஒரு பித்தானைப் பிடித்து விரல்களால் தடவிக் கொண்டிருப்பதை வால்டர் கண்டான். அவனுக்குத் தெரியாமல் அந்தப் பித்தானை அகற்றி விட வேண்டும் என்று வால்டர் தம் நண்பர்களுடன் யோசனை செய்து ஒருநாள் அவ்வாறே செய்து முடித்து விட்டான்.

அன்று ஆசிரியர் அவனிடம் கேள்வி கேட்டதும், அவன் எழுந்திருந்து வழக்கம்போல் தன் அருமைப் பித்தானை விரல்களால் தடவிப் பார்த்தான். சட்டையில் அந்தப் பித்தான் இல்லாததால் பையன் அயர்ந்து போய்விட்டான். அவனால் வாய் திறந்து விடை சொல்ல இயலவில்லை. வால்டர் அகற்றிய பித்தான் அவனுடைய அறிவையே குழப்பி விட்டது. பித்தானைப் பிடித்துக் கொண்டால்தான் முறையாகப் பதில்கூற முடியும் என்ற அளவுக்கு அந்தப் பழக்கம் அவனை அடிமைப்படுத்தியிருந்தது! —டி. எஸ். நாதன்


மர்ம மாளிகையில் பலே பாலு-9

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்




இதென்னது, காட்டு வாத்தல்லவா? இங்கு எப்படி வந்தது? காயமடைந்திருக்கிறதோ?
காட்டு வாத்தில் ஓர் அபூர்வமான இனம், எங்கே இதன் இறக்கையைச் சோதிப்போம்.
பறவை வேட்டையாளர்களின் குறிக்கு இலக்காகியுள்ளது இது. இதை நாம் நமது மிருக வைத்தியசாலையில் கொண்டு சேர்ப்போம்.
இன்னும் ஒரு வாரத்தில் நீ குணமாகி விடுவாய். பிறகு குஷியாகப் பறந்து போகலாம். இப்படி விபத்துக்களில் சிக்கும் பறவைகள் இந்தத் தீவுக்குத்தான் வரும். அவைகளுக்குத் தெரியும் இங்கு பாதுகாப்பும் சிகிச்சையும் கிடைக்குமென்று
மிருக வைத்திய சாலையை அடுத்துள்ள சிறைக்குப் போகிறார்கள் மூவரும்.
இந்தத் தீவு மிருகங்களை விரும்பி வரவேற்கிறது. நம்மை விரும்பவில்லை என்று தோன்றுகிறது. நீ என்ன நினைக்கிறாய் பாபு?
உன் முடிவை ஆமோதிக்கிறேன். உல்லாசப் பயணிகள் இங்கு வந்து கூட்டம் போடுவதை விட மிருகங்களின் சரணாலயமாகத் தன் வீடு இருப்பதையே இத்தீவு விரும்புகிறது போலும். நாமும் நம் எண்ணத்தைக் கை விடுவோம். இத்தீவு இப்படியே இருக்கட்டும்.
மகேஷ், அவர்கள் சம்பாஷணையைக் கவனித்து விட்டுத் திரும்பியவர்....
நானும் அதே முடிவுக்கு வந்துள்ளேன். ஒரு வேளை நாமிருவரும் இத்தீவில் கொஞ்ச நாள் தங்கிடுவோமானால் நம்மையும் இத்தீவு விரும்ப ஆரம்பிக்குமோ என்னவோ. ஆ...! மகேஷ் பாபு... மகேஷ்...
ரவி...! அவர்... மகேஷ் பாபு...? சுவருக்குள்ளாகப் புகுந்து போகிறாரே...?
மகேஷ்... பாபு...! மனிதரா... இல்லை ஆவியா?

தக்காளி




'தக்காளியைப் பழம் என்று கூறினாலும் அது பழ வகையைச் சேர்ந்ததல்ல. 'வெஜிடபிள்' என்ற காய்கறிவகையைச் சேர்ந்ததுதான்.' இந்த முடிவை ஐக்கிய அமெரிக்காவின் உயர்நீதிமன்றம் [சுப்ரீம் கோர்ட்] ஒருவழக்கில் தீர்ப்பு வழங்கி அறிவித்துள்ளது. தாவர இயல்படி தக்காளி ஒருபழம்தான். சந்தேகமே இல்லை. ஆனால், அதை சூப், ஸாஸ், கெட்சப், இப்படி உணவுப் பண்டங்களில் பலவிதமாகவும் பயன்படுத்துகிறார்கள், மேல் நாட்டில். நாமும் ரசம், கூட்டு, பச்சடி, கொத்சு? சாம்பார், குருமா, பாத் இதிலெல்லாம் அதைப்பயன் படுத்தவில்லையா? ஆகவே, வியாபார ரீதியில் 1893—ல் அமெரிக்க சுப்ரீம் கோர்ட் தக்கா வெஜிடபிள்தான் என்று கூறித் தீர்ப்பளித்தது.

தக்காளியின் பிறப்பிடம் தென் அமெரிக்கா. பெரு, ஈக்வடார், பொலிவியா இங்கெல்லாம் காட்டுச் செடியாக வளர்ந்து கிடந்தன. கொலம்பஸ் அமெரிக்காவில் காலடி வைப்பதற்கு முன்பு, மெக்ஸிகோ நாட்டின் நிலங்களில் தக்காளி பயிரிடப்பட்டு வந்துள்ளது. ஐரோப்பியர்களுக்கு முதன் முதலில் புழக்கத்துக்கு வந்தது. மெக்ஸிகோவிலிருந்து கொண்டுவரப் பட்ட தக்காளிகள்தான்.

முதல் தக்காளியைப் பார்த்த ஐரோப்பிய நாடு இத்தாலிதான். 1554—ல் இதற்கு முதலில் இடப்பட்ட பெயர் போமி டி யோரோ (Pomi d'oro) அதாவது தங்க ஆப்பிள் என்று. மஞ்சள் நிறத் தாக்காளியைத் தான் ஐரோப்பியர்கள் முதலில் பார்த்திருக்கிறார்கள். பதினாறும் நூற்றாண்டின் முடிவில் இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ் மற்றும் மத்திய ஐரோப்பா ஆகிய நாடுகளின் தோட்டங்களில் தக்காளி பயிரிடப்படலாயிற்று. பொழுது போக்காகவும், விளையாட்டு ஆர்வத்துடனுமே இதைப் பயிரிட்டனர். 1700—ல் மத்திய காலத்தில் தான் ஐரோப்பிய நாடுகளில் பல தக்காளியை உணவுப் பொருளாகப் பயன்படுத்தின. அமெரிக்காவில் முதல் முதலில் தக்காளியைப் பயிரிட்டவர் தாமஸ் ஜெபர்ஸன். இது 1781—ல். இருந்தும் அப்போது மக்கள் தக்காளி விஷப் பண்டம் என்றுதான் கருதினார்கள். 1900—ல்தான் தக்காளி பிரபலமாகி உணவுப் பொருளாகப் பரவலாகப் பயன்படலாயிற்று.

தக்காளிச் செடி உருளைக்கிழங்கு, புகையிலைச் செடிகளுக்கு உறவு முறையாகவேண்டுமாம். இன்று உலகமுழுதும் தக்காளி கலக்காத உணவுவகை கிடையவே கிடையாது என்று கூறலாம்.



மர்மைரிட்ஸ் (Mormyrids) என்றால் என்ன?

ஆப்பிரிக்காவின் நதிகளில் காணப்படும் மிகப் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த சுத்தநீரில் வாழும் மீன்கள் இவை. 'நைல் நதியில் வாழும் மர்மைரிட்ஸ்களைப் புராதன எகிப்தியர்கள் கடவுளாகக் கூட வழிபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய புராதன ஓவியங்களிலும் கல்வெட்டுக்களிலும் இந்த மீன்களின் உருவங்கள் காணப்படுகின்றன. இதன் உடலோடு ஒப்பிடும்போது இந்த மீன்களுக்கு வியக்கத்தக்க வகையில் மிகப் பெரிய மூளை. இங்கு படத்தில் உள்ளது யானைமுக மர்மைரிட். யானையின் துதிக்கையைப் போல இதன் மூக்கின் அமைப்பு உள்ளது. உணவுக்காக, சகதி, கற்கள் ஆகியவற்றைத் தோண்டுவதற்கு ஏற்ற வகையில் இது இயங்குகிறது.

எல்லாப் பாலும் ஒன்றேதானா?

பால் — என்றதும் நமக்குப் பசுவின் பால்தான் முதலில் நினைவுக்கு வரும். பாலை ஆகாரமாக மனிதன் நீண்ட நெடுங்காலத்திலிருந்தே ஏற்றுக்கொண்டிருக்கிறான். ஆனாலும், உலகின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு பிராணிகளின் பாலை மக்கள் உபயோகித்து வருகிறார்கள். ஸ்பெயின் நாட்டில் ஆட்டுப்பாலை அதிகமாகப் பயன் படுத்துகிறார்கள். பாலைவன வாசிகளான அராபியர்களின் உணவு ஒட்டகப் பால். எகிப்தில் எருமைப் பால் ஏராளம். லாப்லாந்தில் ரெயின்டீர் என்ற கலைமானின் பாலைக் கறந்து கொள்கிறார்கள். திபெத்தியர்களுக்கு 'யாக்' என்ற ஒருவகைப் பிராணி பால் கொடுக்கிறது. உலகின் பல பாகங்களில் வெள்ளாட்டுப் பாலைப் பயன்படுத்துகிறார்கள்.

இப்படிப்பல மிருகங்களிடமிருந்து கிடைக்கும் பால் எல்லாமே ஒரே தன்மையதுதானா? இல்லை. ஒவ்வொரு மிருகமும் தன்னுடைய குழந்தைக்கு ஏற்றவாறு பாலை உற்பத்தி செய்கிறது. பசு தன் குழந்தையான அதன் கன்றுக்குட்டிக்காகத்தான் பாலை உற்பத்தி செய்கிறது. மனிதக் குழந்தைகளுக்காக அல்ல. கன்றுக்குட்டியைவிட மனிதக் குழந்தை நளினமானது இல்லையா..? அதே போல் தாயின் பாலைவிட ஆவின்பால் முரட்டுத்தனமாகத்தானிருக்கும். ஆனாலும் தாய்ப் பாலைப் போலக் கிட்டத்தட்டப் பசுவின் பால் இருப்பதினால் மனிதக் குழந்தை பசும்பாலைக் குடித்து வலுவுள்ளதாகக் 'கழுக்கு மொழுக்கு' என்று வளர முடிகிறது. பசும்பாலில் சர்க்கரை குறைவு, உப்புக்கள் அதிகம், மனிதப்பாலைவிட நான்கு மடங்கு காஸின் (Casein) என்ற புரதச் சத்து பசும்பாலில் உண்டு.

பிராணிகளுக்குத் தகுந்தபடி அவற்றின்பால் மாறுபட்டிருந்தாலும் பொதுவாகப் பாலில் கொழுப்பு — புரதம், கார்போஹைட்ரேட், உப்புக்கள், எல்லாம் உண்டு. உலகின் எந்தப் பகுதியில் உள்ள மக்கள் எந்தப் பாலைக் குடித்தாலும் ஆரோக்கியத்துக்கு அவசியமான இந்தப் பொருள்களெல்லாம் அந்தப்பாலில் இருக்கின்றன.

பசுவின் பாலையும் — ரெயின்டீர் பாலையும் பாகுபாடு செய்து பார்க்கலாம். பசும்பாலில் 87—சதம் நீர் இருக்கும். ரெயின்டீர் பாலில் 68—வீதம்தான். பசும்பாலில் கொழுப்பு 4—சதவீதம்தான். ஆனால், ரெயின்டீரின் பாலிலோ 17 சதவீதம். பசும்பாலில் உள்ள பாதிச் சர்க்கரைச் சத்துத்தான் ரெயின்டீரின் பாலில் இருக்கும். ஆனால், காஸின் மூன்று மடங்கும் மற்ற புரோட்டீன்கள் ஐந்து மடங்கும் உள்ளன. பசும் பாலிலிருந்து ரெயின்டீரின் பால் இவ்வளவு மாறுபட்டிருந்தாலும் லாப்லாந்து மக்கள் அதைக் குடித்து ஆரோக்கியமாக இல்லையா என்ன..?




பசும்பாலும்கூட, அதன் இனம், இடம், உட்கொள்ளும் உணவு இவற்றுக்கு ஏற்ப வித்தியாசப்படும். ஆரோக்கியமான பசுவின் பாலுக்கும், நோஞ்சானான பசுவின் பாலுக்குமே வித்தியாசமுண்டு. அதுமட்டுமா..? பால் கறக்கும் இடை வெளிக்குள்ளும் கறந்த பாலின் குணம் மாறுபடும்! ஆகவே வெளுத்ததெல்லாம் ஒரே பாலாகி விடாது!

காரம் மிக்ஸர்



நிலா சிரித்தது



எஸ்.சியாமளா

சூடான இட்லியும், மசாலா தோசையும் சாப்பிட்டு ஆவி பறக்கும் காபியையும் குடித்த பின்னர் பானுவின் முகம் தெளிவடைந்தது. குழாயில் முகத்தை நன்றாகக் கழுவிக் கொண்டாள். சுருண்ட கூந்தலை கையால் படிய அழுத்திக் கொண்டாள். புது வாழ்வைத் தொடங்கும் புத்துணர்ச்சி அந்தப் பிஞ்சு உள்ளத்தில் படிந்து மற்ற கவலைகளை, துயரத்தை ஓரளவு மறக்கச் செய்தன.

பானு சிவந்த ரோஜா நிறம். வட்டமுகம், நீண்ட விழிகள், கதுப்புக் கன்னங்கள், பிஸ்கட் கலரில் அரக்கு பார்டர் போட்ட சின்னாளம் பட்டுப் பாவாடையும் சிவப்புச் சட்டையும் அணிந்திருந்தாள். காதுகளில் சின்ன 'ஸ்டட்'. கழுத்தில் சாதாரண மணி மாலை. கைகளில் பிளாஸ்டிக் வளையல்கள். இந்த எளிமையான அலங்காரத்தில் பானு அழகாகத் தோன்றினாள். குழந்தை முகமானாலும் அதில் அநாவசிய பயமோ கூச்சமோ இல்லாத கம்பீரம் படர்ந்திருந்தது. நேர்மையான நிமிர்ந்த பார்வை.

மறுபடி கார்ப் பயணம் தொடர்ந்தது. வாகீசன் பானுவுடன் பின் சீட்டில் ஏறி அமர்ந்திருந்தார். ''பானு! வீட்டிலே என் பெண் இந்து இருக்கிறாள். உன் வயதுதான். ஐந்தாவது படிக்கிறாள். நீயும் அவளோடு சேர்ந்து படிக்கலாம். உனக்குத் துணையாக இருப்பாள்.'' வாகீசன் பானுவிடம் கூறினார். பானுவின் முகம் மலர்ந்தது.

''அப்படியா மாமா! நான் கூட ஐந்தாவதுதான் படிக்கிறேன். ஆனா.. அந்தக் கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் இங்கிலீஷ், கணக்கு எல்லாம் சொல்லியே தருவதில்லை. வீட்டிலே அம்மாதான் கற்று கொடுத்தாள்.''

''பரவாயில்லை. நீ கெட்டிக்காரி. சீக்கிரம் கற்றுக் கொள்ளுவாய். அப்புறம் கார்த்திக் இருக்கிறான். அவனுக்கு ஐந்து வயது. இப்பத்தான் முதல் வகுப்புப் படிக்கிறான். அவனோடு விளையாடினாலே உன்னோட துக்கமெல்லாம் போயிடும்..''

''ஓ... கார்த்திக். அழகான பெயராக இருக்கே!''

பானு ரசித்துப் பேசியதைக் கண்டு சிரித்தார் வாகீசன்.

''மாமி லேடீஸ் கிளப் மீட்டிங் அது இதுன்னு அடிக்கடி வெளியேபோய் வருவாள். சமையல் செய்யச் சுந்தரி என்று ஒரு மாமி இருக்கிறாள். வீட்டு வேலைகளைச் செய்யப் பொன்னின்னு ஒரு வேலைக்காரி இருக்கிறாள். அவள் புருஷன் சுபாலின்னு; அவனே தோட்டக்காரன். இதோ, இந்த டிரைவர் முத்துச்சாமி. காரில் ஸ்கூலுக்கு அழைத்துப் போவான். சாயந்திரம் அழைத்து வருவான். லீவு நாட்களிலே கடற்கரைக்குப் போகலாம். சினிமாவுக்குப் போகலாம்...'' என்றார். குழந்தைக்குப் புது வாழ்க்கையில் உற்சாகத்தை உண்டாக்கினார். பானுவும் சந்தோஷத்தோடு கேட்டுக் கொண்டிருந்தாள்.

வாகீசனுக்குத் தன் குழந்தைப் பருவ நாட்கள் நினைவில் ஆடின. அவர் முகம் பல உணர்ச்சிகளில் சலனம் அடைந்தது. அபிதாவின் கருணை பொங்கும் கண்கள் அவர் உள்ளத்தில் நன்றியை உண்டாக்கின.

''பானு! இப்ப நீ அப்பா அம்மாவை இழந்துட்டு எங்களிடம் வர்ற மாதிரி முப்பது வருஷங்களுக்கு முன் பத்து வயதுச் சிறுவனாக நான் உன் தாத்தா வீட்டுக்கு - உன்னோட அம்மாவின் அப்பா வீட்டுக்கு வந்தேன்...!'' சிறிது நிறுத்தினார்.

பானு இலேசாகச் சுருங்கிய கண்களினால் அவரைத் திகைப்புடன் பார்த்தாள்.

''ஆமாம்மா! உன் அம்மாவுக்கு அப்ப எட்டு வயது இருக்கும். என் தாத்தாவும் உன் அம்மாவோட தாத்தாவும் அண்ணன் தம்பிகள். அபிதாவோட அப்பாவுக்கு என்னை வீட்டில் வளர்க்க இஷ்டமே இல்லை. அவளோட அம்மாவோ ரொம்பப் பயங்கொள்ளி. அவரிடம் ரொம்பப் பயப்படுவாள். உன்னோட மாமா இரண்டு பேர்களும் அப்பாவைப் போல் இருந்தார்கள்



என்னை லட்சியமே செய்யமாட்டார்கள். ஆனா.. ஆனா... உன் அம்மா கருணைத் தெய்வம். அந்தச் சின்னவயதிலேயே பெரிய மனுஷி மாதிரி இருப்பாள். அவளுடைய அன்பும், ஆதரவும் தான் என்னை அந்த வீட்டில் வாழ வைத்தன. எனக்காகப் பரிந்து அண்ணன்களிடம் சண்டை போடுவாள். தந்தையிடம் செல்லம் கொஞ்சியே காரியத்தைச் சாதிப்பாள். என்னைப் படிக்க வைக்க ஏற்பாடு செய்தாள். எனக்கு ஒரு துளியாவது கொடுக்காமல் தான் எதுவும் சாப்பிட மாட்டாள். தன்னோடு சேர்த்து என்னை உட்கார வைத்துச் சாப்பாடு போடச் சொல்லுவாள். நல்ல துணிகள் வாங்கித் தரப் பிடிவாதம் பிடிப்பாள். செல்லப் பெண்ணான அவள் வார்த்தையை யாரும் தட்ட மாட்டார்கள். உன் தாத்தா பாட்டியின் பணத்தில் நான் வளரவில்லை.. உன் அம்மாவின் அன்பில் வளர்ந்தேன்.''

வாசீசன் குரல் நெகிழ்ந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

தன் அம்மாவின் உன்னத குணங்களையும் பண்புகளையும் மாமாவின் வாயினால் கேட்கக் கேட்கப் பானுவின் இதயம் இன்ப அலையில் மிதந்தது.

''பானு! என் முகம் வாட்டமடைய அவள் சகிக்க மாட்டாள். உடம்புக்கு ஜுரம் ஏதும் வந்தாலும் தன் குஞ்சுக்கையினால் மருந்து தருவாள். கடவுளை வேண்டி நிற்பாள். நான் என் பெற்றோரைக் கூட மறந்து விட்டேன். என்னுடைய உடல், உள்ளம், முழுதிலும் அபிதாதான் நிறைந்து நின்றாள். இப்பவும் அந்தக் கருணைக் கண்களை என்னால் மறக்கவே முடியாதாம்மா. இந்த உயிர் இந்த வாழ்க்கை எல்லாம் உன் அம்மா கொடுத்தது. நீ அந்தக் குணவதிபோல வளரவேண்டும்... உன் உருவில் என் அருமைத் தங்கையைக் கண்டு மகிழ்வேன் பானு!''

வாசீசன் குழந்தையை அணைத்துக் கொண்டார். குழந்தை பானு அவருடைய வாழ்க்கை வரலாறைக் கேட்டுப் பிரமிப்படைந்தாள். அம்மா இதையெல்லாம் சொல்லவில்லையே என்று நினைத்தாள். அதை ஒரு பெருமையாகச் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை போலும் என்று ஊகித்துக் கொண்டாள்.

''நாங்கள் அப்போ செங்கல்பட்டில் இருந்தோம். ராமகிருஷ்ண ஹோமில் படித்தேன். எல்லாப் பாடங்களிலும் எல்லா வகுப்பிலும் முதலாக வந்து ஆசிரியர்கள் அனைவருடைய ஆசியையும், அன்பையும் பெற்றேன். அவர்களுடைய சிபாரிசில் சென்னையில் இலவசப் படிப்புக்கு வசதி கிடைத்தது. நான் கல்லூரியில் சேர்ந்தேன். உன் அம்மா கல்யாணம் ஆகிக் கணவரோடு சென்று விட்டாள். ஒவ்வொரு லீவிலும் உன் அம்மாவைப் பார்த்து வருவேன். கல்லூரிப் படிப்பு முடிந்து நல்ல வேலையும் கிடைத்தது. உன் அம்மாவைப் போல அப்பாவும் நல்லவர். ஒரு லட்சியவாதி. பிடிவாதமாகக் கிராமத்திலேயே தங்கியிருந்ததால் நிறைய வசதிகளோடு வாழ முடியவில்லை. பல வருஷங்களுக்குப் பிறகுதான் நீ பிறந்தாய். நீ பிறப்பதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பு நான் பெரிய ஆபீசராக ஆனேன். இன்னொரு ஆபீசரின் பெண் சொர்ணாவைக் கல்யாணம் செய்து கொண்டேன். கல்யாணத்திற்குப் பெண் பார்க்க உன்

அம்மாவைத்தான் அழைத்துப் போனேன்..'' என்று முடித்தார்.

காரும் சென்னையை நெருங்கியது. பெரிய பெரிய பங்களாக்களையும், தியேட்டர்களையும் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டே வந்தாள் பானு. அவள் மனத்தில் மாமா சொன்னவை திரும்பத் திரும்ப எதிரொலித்தன. ''மாமா எத்தனை நல்லவர். மாமா மாதிரிதான் அவர் பெண் இந்துவும் இருப்பாள். அவளோடு ஆனந்தமாகக் கை கோத்துக்கொண்டு, சிரித்து விளையாடி, பள்ளிக்கூடம் போய்.. எத்தனை சுகமாக இருக்கும். இந்து அழகாக இருப்பாள்.. ஆசையாக இருப்பாள்... அம்மா... நீ கவலைப்படாதே..'' என்று மனத்துள் சொல்லிக் கொண்டாள். ஒத்த வயதுள்ளவர்களோடு இருந்தாலே இன்பம் தானே, கார் ராயப்பேட்டை ஹைரோட்டில் வந்து ஒரு தெருவில் திரும்பி ஒரு பெரிய பங்களாவின் முன் நின்றது. ஆசைகளோடு பானு காரிலிருந்து இறங்கினாள். (தொடரும்)

மின்னும் பொன்னும்

ஒருநாள் காலை ஈஸா (அல) அவர்கள் யூதன் ஒருவனைக் கூட்டிக் கொண்டு பயணமானார்கள். கையில் மூன்று ரொட்டித் துண்டை வழி உணவுக்காக எடுத்துச் சென்றனர்.

மதியம் வரவே இருவரும் ஆற்றண்டை அமர்ந்து ரொட்டியை உண்ட பின் ஒரு ரொட்டித் துண்டு மீதம் இருந்தது. ஈஸா (அல்) அவர்கள் நீர் குடிக்க ஆற்றுக்குச் சென்று விட்டார்கள். யூதன் அங்கேயே இருந்தான். திரும்பி வந்தபோது ரொட்டித் துண்டைக் காணவில்லை.

''ரொட்டித் துண்டை எடுத்தது யார்..?'' என்று யூதனிடம் ஈஸா கேட்டார்கள். அவன் 'தெரியாது' என்றான்.

வழியில் ஒரு மான் அகப்பட்டது. அதன் மாமிசத்தைச் சமைத்து உண்டான். எலும்புகளைக் குவியலாக்கவைத்து, 'மானாகுக' என்றார் ஈஸா. புள்ளிமான் துள்ளி ஓடியது. ''இறைவன் மீது ஆணையாகச் சொல். மூன்றாவது ரொட்டியைத் திருடியது யார்..?'' என்றார். யூதன் தெரியாது என்றான்.

பெரும் ஆற்றண்டை யூதனை நீரின் மேல் நடத்தி அக்கரை கொண்டு சேர்த்தார் ஈஸா அவர்கள். ''இத்தனை அற்புதங்கள் செய்த அல்லாவின் மீது ஆணையாகக் கேட்கிறேன் ரொட்டியைத் திருடியது யார்..?'' என்றார். அவன் தெரியாது என்றான்.

ஆற்று மணலை மூன்று குவியலாகக் குவித்துப் பொன்னாகுக என்றார். மணல் பொன்னாகிப் பகலவன் ஒளியில் மின்னியது. ''இதில் ஒரு குவியல் எனக்கு; ஒன்று உனக்கு; மற்றொன்று மூன்றாவது ரொட்டியைத் திருடியவனுக்கு'' என்றார் ஈஸா. பொன்மீது ஆசைகொண்ட யூதன் இரண்டு பங்கு கிடைக்கும் என்ற பேராசையால் நான் ரொட்டியைத் திருடியவன் என்ற உண்மையைச் சொன்னான். மூன்று பொற்குவியல்களையும் அவனிடமே கொடுத்துவிட்டு ஈஸா அவர்கள் பயணமானார்கள். வழியில் வந்த திருடர்கள் பொன்னைப் பறித்துக் கொண்டு யூதனைக் கொன்றனர்.

திருகுர்ஆனிலிருந்து: சிம்காசி






''பதவி வெறி கொண்டவராக என் நண்பர்களால் வருணிக்கப்பட்டுக் கொலையுண்ட ஸீஸர் ஓர் உயில் தயாரித்திருக்கிறார். இதோ!'' என்று கூறிக் கூட்டத்தினரின் பார்வையில் படும்படி ஒரு தோல் சுருளைக் காட்டிவிட்டுத் தன் மேலங்கிக்குள் மறைத்துக் கொண்டான் ஆந்தனி.

''ஸீஸரின் அந்த உயிலைப் படி'' என்று முழக்கமிட்டது கூட்டம். ஆனால், ஆந்தனி புரூடஸையும் சதிகாரர்களையும் புகழ்ந்து பேசிக் கொண்டே போனான். உயிலைப் படிக்கவில்லை. பொறுமை இழந்த கூட்டம் புரூடஸையும் அவன் சகாக்களையும் ''கொலைகாரர்கள், துரோகிகள்!'' என்று கூறி ஆத்திரத்துடன் ''ஸீஸரின் உயிலைப்படி'' என்று கூச்சலிட்டது.

''படிக்கிறேன், மாவீரன் ஸீஸரது உயிலைப்படிக்கத்தான் போகிறேன். ஆனால், அதற்கு முன்பாக அந்த



மகத்தான மனிதனின் திருமுகத்தை நீங்கள் காணவேண்டாமா..? சதிகாரர்களால் முப்பத்தியொன்பது இடங்களில் குத்தப்பட்டுக் கொலையுண்ட இதோ இந்த ஒப்பற்றவரின் ஒளிமுகத்தைப் பார்க்கவேண்டாமா?'' என்று கூறிப் பளிங்கு மேடை மீது கிடத்தப்பட்டிருந்த ஸீஸரின் சடலத்தினருகில் போனான். சடலத்தை மூடிப் போர்த்தி இருந்த சிவப்புத் துணியை அகற்றினான். அந்த உடலில் குருதிவழிந்து காய்ந்திருந்த கத்திக் குத்துக் காயங்களை ஒவ்வொன்றாகக் காட்டினான், குமுறிக் கொண்டு நிற்கும் மக்களுக்கு. அவர்களைக் கொதித்தெழச்செய்ய வேண்டுமென்பதே அவன் நோக்கம்.

''இதோ இந்தக் காயம் காஷியஸ் தனது குத்துவாளைப் பதித்ததினால் ஏற்பட்டது. இந்தக் காயம் காஸ்காவின் கைங்கர்யம்.. இதோ இது.. கொடுமையிலும் கொடுமை! ஸீஸர் தனது உயிர் நண்பன் என்று கருதிய புரூடஸின் கூரிய கத்தி பாய்ந்த இடம்!'' ஆந்தனியின் பேச்சைக் கேட்ட பெண்கள் குமுறி அழுதார்கள்;

ஆண்கள் 'பழிக்குப்பழி' என்று வீறு கொண்டெழுந்தார்கள். சட்டென்று ஆந்தனி ஆத்திரங்கொண்ட கூட்டத்தினரை - ஸீஸரின் உயிலை நினைவுபடுத்தி அமைதியடையச் செய்தான். தோல் சுருளை விரித்தான். உயிலை உரக்கப்படிக்கலானான். '



மக்கள் புருடஸுக்கு எதிராகக் கலகம் செய்யும் அளவுக்கு ஆந்தனியின் பேச்சு அமைந்திருந்தது. வெறி கொண்ட மக்கள் வெள்ளம்; சதிகாரர்களின் வீடுகளைக் கொளுத்தினர், காஷியஸும்,



புருடஸும் ஆசியா மைனர் பகுதிக்குத் தப்பி ஓட்டமெடுத்தனர். ரோம சாம்ராஜ்யத்தின் ஆளுகை மூன்று பேரின் பொறுப்பில் வந்தது. மார்க் ஆந்தனி, ஆக்டேவியஸ் (ஸீஸரின் உறவினன்) லெபிடஸ் ஆகிய மூவருமே அவர்கள். நம்பிக்கைக்கு உகந்தவர்களில்லாதவர்களையெல்லாம் கொன்று நாட்டில் ஒழுங்கை நிலைநாட்டினார்கள் இம்மூவரும். ஸார்டிஸ் என்ற நகரின் அருகே தங்கள் படையுடன் தங்கியுள்ள புருடஸையும், காஷியஸையும் துரத்திச் சென்று முறியடிக்க ஒருபெரும் படையைத் திரட்டினார்கள்.

மார்க் ஆந்தனியும், ஆக்டேவியஸும் பெரும் படையுடன் தங்களை அழிக்க வருகிறார்கள் என்ற செய்தி கிடைத்தபோது அந்தச் சவாலை எப்படி ஏற்றுச் சமாளிப்பது என்பதில் புருடஸுக்கும், காஷியஸுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. தங்களைத் தாக்கவரும் படையை உடனே எதிர் கொண்டு போரிட்டுத் தாக்கிச் சின்னாபின்னப்படுத்த வேண்டுமென்றான் புருடஸ். ஆனால், அனுபவமிக்க வீரனான காஷியஸ் ''விரோதி நெடுந்தூரம் நம்மைத் தேடிப் பிரயாணப்பட்டு வரட்டும். நாம் அவசரப்பட்டுச் செயல்பட வேண்டாம். அவர்கள் இங்கு வரும்போது களைத்துப் போவார்கள். அவர்களைத் தாக்கி வெற்றி கொள்ளுவது சுலபமாகும்'' என்றான்.

இதற்கு முன்பு இரு சந்தர்ப்பங்களில் காஷியஸின் ஆலோசனைகளை புருடஸ் நிராகரித்துத் தன் விருப்பப்படியே நடந்து கொண்டதினால் இப்போது காஷியஸ் தன் முடிவுப்படியே செயல்பட்டுத் தங்களது முடிவுக்கும் முத்திரை குத்தி விட்டான்.



அன்றிரவு புருடஸுக்குத் தூக்கம் வரவில்லை. ஏதேதோ மனக் குழப்பங்கள். தனக்குப்பணி புரியும் பையனை ஏதாவது பாடும்படிக் கேட்டுக் கொண்டான். லியர் என்ற தந்தி வாத்தியத்தை மீட்டியபடி அவன் பாடினான். அவன் பாடல் புருடஸுக்குத் தூக்கத்தை வரவழைக்கவில்லை.. பாடலைப்பாடிய பையனே பாடிக் கொண்டிருக்கும் போதே கண்ணயர்ந்து போனான். பணியாளனை உலுக்கி எழுப்ப மனமில்லை எஜமானனான புருடஸுக்கு; ஏதோ புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு படிக்கலானான். படித்துக் கொண்டிருக்கும் போதே கண் சொக்கியது. தூக்க மயக்கம்-நினைவிழந்தான்.



ஒருகனவு. ஜூலியஸ் ஸீஸரின் ஆவி காற்றிலே மிதந்தபடி இவனை நோக்கி வருகிறது. அருகில் வந்த ஆவி அவனைப் பார்த்துப் பேசுகிறது. ''புருடஸ் நான் உன்னை பிலிப்பியில் சந்திக்கிறேன்'' என்கிறது, ஸீஸரின் ஆவி. உடனே மறைந்து விடுகிறது. சட்டென்று கண் விழிக்கிறான் புருடஸ். ஏதும் செய்ய முடியாத நிராதரவான ஒரு நிலை புருடஸை ஆட்கொண்டது. எதிர்காலம் பயங்கரமானதாகத் தோன்றியது.

மார்க் ஆந்தனியும் ஆக்டேவியஸும் முன்னேறி வருகிறார்கள். காஷியஸின் படை தோல்வியடைகிறது. தற்கொலை செய்து கொள்ளுகிறான் காஷியஸ். புருடஸைத் தொடர்ந்து ஆந்தனியின் படைகள் பிலிப்பிக்கு வருகின்றன. சதிகாரர்கள் முறியடிக்கப்படுகிறார்கள்.



ஆந்தனியிடம் பிடிபட்டுக் கைதியாக, ரோமாபுரியின் வீதிகளில் குனிந்த தலையோடு இழுத்துச் செல்லப்படுவதைப் புருடஸ் விரும்பவில்லை. தோல்வி நிச்சயம் என்று உறுதியானதும், தனது விசுவாசமிக்க ஊழியனிடம் தனது உடைவாளைக் கொடுத்து, அதை உறுதியாகப் நீட்டிக் கொண்டிருக்கும்படி பணித்து, அதன் கூரிய முனையிலே தன் உடலைப் பதித்துக் கொண்டு தற்கொலை செய்து கொள்கிறான் புருடஸ்.

வெற்றி வீரர்களாகப் பாசறைக்குள் நுழைந்த ஆந்தனியும் ஆக்டேவியஸும் புருடஸின் முடிவைக் கண்டு சிலையாகிறார்கள். ஓர் உண்மையான ரோமானியனுக்குகந்த மரணம்தான் அது என்று அவனைப் பாராட்டவும் செய்கிறார்கள். அவனது சடலத்தைத் தனது கூடாரத்திற்குள் கிடத்த அனுமதித்ததோடு தக்க மரியாதையுடன் அடக்கம் செய்யவும் ஆணையிடுகிறான், ரோமசாம்ராஜ்யத்தின் வருங்கால மன்னனான ஆக்டேவியஸ். பழிவாங்கப் பட்டது என்றமன நிறைவோடு ஆந்தனி தனது படையெடுப்பைத் தொடருகிறான்.

(முற்றும்)

● குளிர்ந்த நீரைவிடச் சூடான நீரே சீக்கிரமாக உறையும்.


● ஒரு பாத்திரத்தில் உள்ள வெள்ளைப் பெயிண்டில் நான்கைந்து துளிகள் கறுப்புப் பெயிண்டைக் கலந்தால் வெள்ளைப் பெயிண்டின் வெண்மை பளீரென்று மேலும் அதிகரிக்கும். கறுப்புப் பெயிண்ட் துளிகள் ப்ளீச்சிங் ஏஜண்டாக மாறுவதுதான் காரணம்.

கே. சரோஜா.

மூளைக்கு வேலை

போன இதழில் ஒரே கோட்டிலான கப்பலின் அடிமுடியைத் தேடிக் 'கிர்'ரடித்தீர்களில்லையா? இதோ இந்த 'மேஸி'ல் உள்ளே புகுந்து வெளியே வரும் வழியைக் கண்டுபிடியுங்கள். பென்சில் தான் உங்களுக்கு வழிகாட்டி.

— வாண்டு





வேண்டாத ஆசை

அழகு பழனிச்சாமி

மாலை நேரம். மணி நாலரை இருக்கும். என்றைக்கும் இல்லாத குஷியுடன் வீட்டை நோக்கி ஓடி வந்தாள் அமுதா.

வீட்டுக்குள் நுழைவதற்கு முன்பே, ''அம்மா.. அம்மா..!'' என்றபடி மகிழ்ச்சிச் செய்தியைத் தெரிவிக்கும் துடிப்புடன் நுழைந்தாள்.

சமையலறையிலிருந்த அவளுடைய அம்மா காமாட்சி, ''அமுதாக் கண்ணு, பள்ளிக்கூடத்திலே இருந்து வந்துட்டியா...? இந்தா காப்பி... சூடாக இருக்கு, குடி'' என்றவாறு ஆவி பறக்கும் காப்பியை நீட்டினாள்.

காப்பியை உற்சாகப் பெருக்குடன் வாங்கிக் கொண்ட அமுதா, ''அம்மா! எனக்கு ரொம்ப நாட்களா ஒரு ஆசை. இன்னிக்குத்தான் ராணிகிட்டே சொன்னேன். அவளும் ஆகட்டும்னு சொல்லிட்டாள்..'' என்றாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

காமாட்சி அம்மாள் தன் மகளை ஆவலோடும் ஆர்வத்தோடும் பார்த்தாள். ''என்னடி அமுதா சொல்றே? அப்படி என்ன ஆசை?'' என்று வியப்புடன் கேட்டாள்.

காப்பியை நிறுத்தி நிறுத்தி மிடறு மிடறாகக் குடித்துக் கொண்டே பேசலானாள் அமுதா.

''அம்மா, எதிர் வீட்டு ராணி இருக்கால்லே..?''

''ஆமாம் இருக்கா!''

''அவ வீட்டிலே பெரிசா ஒரு காரு இருக்கில்லே..''

''ஆமாம். அது 'பிளைமவுத்'காரு. அது பெரிசாத்தாண்டி இருக்கும். அதுக்கு என்ன இப்போ...!''

''அதிலே ஏறிப் போகணும்னு எனக்கு ஒரே ஆசை. ராணிகிட்டே கேட்டேன். அவளும் 'சரி'ன்னு சொல்லிட்டா..'' — சொல்லிவிட்டு, மகிழ்ச்சி பொங்கக் குதித்தாள் அமுதா.

மகிழ்ச்சி ததும்பும் மகளின் முகத்தைப் பார்த்தாள் அன்னை. ''அமுதா! நமக்கு ஏண்டி அந்த வேண்டாத ஆசை! அடுத்த வாரம் பரீட்சை இருக்குன்னியே பேசாமெப் போய்ப் படி—'' வேண்டா வெறுப்புடன் மொழிந்த காமாட்சி அம்மாள், ஏதோ வேலையாகப் பக்கத்து வீட்டுக்குச் சென்றாள்.

''இந்த அம்மாவே இப்படித்தான்!'' என்று வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டாள். அமுதா.

அமுதாவுக்கும் ராணிக்கும் ஏணி வைத்தால்கூட எட்டாது. மடுவுக்கும், மலைக்கும் உள்ள அத்தனை வித்தியாசம்!

ராணியோ கொடி கட்டிப் பறக்கும் பிரபல நடிகையின் மகள். வசதிக்கும் ஆடம்பரத்துக்கும் சொகுசுக்கும் கேட்கவா வேண்டும்...?

ஆனால், அமுதா...?

அவள் ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்துப் பெண். அவளுடைய அப்பாவுக்கு ஜவுளிக் கடையொன்றில் வேலை. குறைந்த சம்பளந்தான். வீடு என்ற பெயருக்குச் சின்னதாக ஓட்டு வீடு சொந்தமாக இருந்தது. குறைந்த வருமானத்திலும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டாவது, ஒரே மகளான அமுதாவை கான்வெண்ட் ஸ்கூலில் சேர்த்துப் படிக்க வைத்தனர். செல்லமாகவே வளர்த்தனர். கான்வெண்டில் படிக்கிறதில் அமுதாவுக்குக் கொள்ளை மகிழ்ச்சி!

அமுதாவுக்கும் ராணிக்கும் அவ்வளவு நெருங்கிய பழக்கம் இல்லை. தன்னுடன் கான்வெண்டில் படிக்கிறவள் என்ற அளவில்தான் தெரியும். அமுதாவின் வீட்டுக்கு எதிரில் பெரிய காலி இடம் இருந்தது. திடீரென்று அந்த இடத்தில் கட்டிட வேலை தொடங்கி, மூன்றே மாதங்களில் கண்ணைக் கவரும் பங்களாவாகக் காட்சியளித்தது.

ராணி வீட்டார் அந்தப் பங்களாவில் குடி வந்த பின்னர்தான் ராணியைப் பற்றியும் அவள் பிரபல நடிகையின் மகள் என்பதும் தெரிந்தது.

அமுதா ஆவலோடு வாசல்படியில் வந்து நிற்பாள். ராணியின் பங்களாவின் 'போர்டிகோ'வில் அந்த அழகிய நீல நிற 'பிளைமவுத்' கார் நின்று கொண்டிருக்கும். அது அவள் கண்ணில் படும். உடனே அவள் மனத்தில் ஓர் ஆசை துள்ளிக்கொண்டு எழும்! 'அந்தக் காரில் உட்கார்ந்து கொண்டு போனால் எப்படியிருக்கும்!'

அமுதாவும் ராணியும் ஒரே கான்வென்டில் படிப்பவர்கள்தான். வீடும் எதிர் எதிரேதான் இருந்தது. இருந்தும் இருவருக்கும் நட்போ, பழக்கமோ ஏற்படவில்லை! 'அந்தஸ்து' என்ற சுவர் குறுக்கே இருந்தது.

ஒருநாள் அமுதா ஸ்கூலுக்குச் சென்று கொண்டிருந்தாள். வழியில் கலாவின் வீட்டின் முன்னால் ராணியின் கார் நின்று கொண்டிருந்தது. அமுதா காரை நெருங்கியபோது, கலா ஓடி வந்து காரில் ஏறப் போனாள். தற்செயலாக அமுதாவைப் பார்த்து ராணி, ''அமுதா! நீயும் ஸ்கூலுக்குத் தானே வர்றே? காரில் ஏறிக்கோயேன்'' என்றாள் அவ்வளவுதான்!

கலாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. ''ட. இவளே! இப்போ நான் வரவேண்டுமா..? இல்லே அவள் வர வேண்டுமா? அவதான் வேண்டும்னு நான் கீழே இறங்கிக் கிறேன்...'' என்று முகத்தைக் கோணலாகச் சுழித்துக் கொண்டு கூறினாள்.

கலா ஜட்ஜ் வீட்டுப்பெண். அவள் நட்பை இழக்க முடியுமா..? மறு நிமிடம் கலாவின் அட்டகாசச் சிரிப்புடன் கார் பறந்தது!

அமுதாவுக்கு அழுகையே வந்து விட்டது!

''ஒரே ஒரு தடவையாவது ராணியின் காரில் நாம் செல்ல வேண்டும்; அதைக் கலா பார்க்க வேண்டும்!''— இப்படி மனத்துக்குள் சொல்லிக் கொண்டாள் அமுதா.

ஒரு வாரம் சென்றதும் ராணியுடன் பேசுவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது, அமுதாவுக்கு.

அப்போது இடைவேளை நேரம், பள்ளியின் புல்வெளியில் ராணியுடன் அவளைச் சுற்றி நாலைந்து தோழிகளும் அமர்ந்திருந்தனர். அமுதா அந்த வழியாகச் சென்று கொண்டிருந்தாள். அப்போது, ''அமுதா, இங்கே வாயேன்..'' என்று அழைத்தாள் ராணி. அமுதா மெல்ல அங்கு சென்றாள்.

''அமுதா! இந்தக் கணக்குப் போட வரல்லே... அடுத்த 'பீரியட்' கணக்குப் பாடம். கொஞ்சம் போட்டுக்காட்டேன்'' என்றாள். அமுதா கணக்கைப் பார்த்தாள். இலேசான கணக்குத்தான்! ''ஓ! இதோ போட்டுக் காட்டுகிறேன்!'' என்றவளுக்குத் திடீரென்று 'பிளைமவுத்' காரின் நினைவு வந்து விட்டது. ஒரு கணம் தயங்கினாள் அமுதா.

''என்ன அமுதா. ஏதோ யோசனை பண்றயே என்ன..?'' என்றாள் ராணி.

''ராணி! இந்தக் கணக்கைப் போட்டுக் காட்டுறேன். ஆனால், ஒரு வேண்டுகோள். ஒரு நாளைக்காவது உன் பிளைமவுத் காரில் என்னை வீட்டிலிருந்து பள்ளிவரையில் கொண்டு வந்து விட வேணும். அதைச் செய்வியா..?'' என்று கேட்டாள் அமுதா. ஏக்கமும் ஆசையும் அவள் குரலில் இழையோடியது.

''ஓ! தாராளமாக. நாளைக் காலையிலேயே உன்னை என் காரிலே ஏத்திக்கிட்டு வர்றேண்டி. இதோ 'பிராமிஸ்' பண்ணறேன்.'' என்றாள் ராணி. அமுதா ஒரு நிமிடத்தில் கணக்கைப் போட்டுக் காட்டி விட்டாள்.

கணக்குப் போட்டு முடிக்கிற வரையில் ஒன்றும் புரியாமல் உட்கார்ந்திருந்த ராணியும் அவள் தோழிகளும் சரியான விடை வந்தவுடன்,



''பூ! இந்தக் கணக்கு இவ்வளவு தானா...?'' என்று உதட்டைத் கோணலாக நெளித்து வளைத்தார்கள்!

அமுதா, ''அப்போ நான் வர்றேன், ராணி'' என்றாள். உடனே ராணி, ''அமுதா! நாளைக்காலையில் வீட்டில் தயாராக இரு. உன்னை என் காரிலே ஏத்திக்கிட்டு வர்றேன்'' என்றாள். அமுதா மிகவும் மகிழ்ச்சியுடன் 'சரி' என்று கூறிவிட்டு நகர்ந்தாள்.

அன்று இரவு வெகு நேரம் வரையிலும் படித்துக் கொண்டிருந்தாள் அமுதா. மூன்று மணியளவில் தற்செயலாக விழித்த காமாட்சியம்மாள் ''என்ன அமுதா! இன்னுமா படிச்சுக்கிட்டிருக்கே? தூங்கப்போயேன்'' என்று கனிவாகக் கூறினாள். தூங்கப் போய் விட்டாள் அமுதா.

நன்றாக விடிந்து விட்டது.

அமுதா அடிக்கடி எதிர் வீட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள். எதிர் வீட்டில் அந்த நீல நிற பிளைமவுத் கார் நின்று கொண்டிருந்தது. ஆனால், ராணியைக் காணோம்!

சாப்பிட்டுவிட்டு டிபன் பாக்ஸ், பைக்கட்டுடன் வெளியே வந்தாள். எதிர் வீட்டிலே ராணியையும் காணோம்; அந்த நீலநிற பிளைமவுத் காரையும் காணோம்!

ஐயோ! ராணியின் காரை நம்பி நேரமாகி விட்டதே! அவசரம் அவசரமாகக் கிளம்பினாள் அமுதா. வீதியிலே சைக்கிள், ஆட்டோ, டாக்ஸி, லாரி, பஸ்ஸும் குறுக்கும் நெடுக்குமாகப் போய் கொண்டும் வந்து கொண்டுமிருந்தன.

பள்ளிக்கூடத்துக்கு நேரமாகிவிட்டது. அவசரம் அவசரமாகத் தெருவைக் கடக்கும்போது....

''ஆ...!'' எதிரே வந்த லாரி அமுதாவின் மேல் மோதி விட்டது! நல்லவேளை காயங்களுடன் தப்பினாள்.

கொஞ்ச நேரத்தில் அமுதா ஆஸ்பத்திரி ஒன்றில் 'பெட்'டில் இருந்தாள். காலிலும் கையிலும் கட்டுகள் போடப்பட்டிருந்தன.

அமுதாவின் அம்மா காமாட்சி கதறி அழுது கொண்டிருந்தாள்.

''வேறு வழியில்லை. கால் எலும்பு முறிந்து விட்டது. ஒரு காலை எடுக்க வேண்டியதுதான்.'' டாக்ரம்மாள் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''ஐயோ! என் கால் போச்சே!''— அலறினாள் அமுதா!

''என்னடீ அமுதா? என்ன உளர்றே? நல்லா விடிஞ்சு பள்ளிக்கூடம் போற நேரமாச்சுடீ... சீக்கிரம் எழுந்திரு...'' காமாட்சியம்மாள் உரத்த குரலில் கூறினாள்.

திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் அமுதா.

அவசரம் அவசரமாக எழுந்து உட்கார்ந்து கொண்டவள் காலைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். கால் ஒடியவில்லை. அப்போ, கண்டதெல்லாம் கனவுதானா...?

''நல்லவேளை! எல்லாம் கனவாய்ப் போச்சு'' அவள் வாய் நிம்மதியுடன் முணுமுணுத்துக் கொண்டது.

''அமுதா ராத்திரி ரொம்ப நேரம் படிச்சுக் கொண்டிருந்தாயேன்னு சீக்கிரம் எழுப்பவில்லை. சீக்கிரம் குளித்து விட்டுச் சாப்பிடு. பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு'' என்றாள் அம்மா.

அமுதா! வெளியே வாசலுக்கு வந்து பல் தேய்த்துக் கொண்டே எதிர் வீட்டை நோக்கினாள். அங்கே ராணியையும் காணோம். அந்த அழகிய பிளைமவுத் காரையும் காணோம்!

'இன்னிக்குக் கட்டாயம் தன் காரிலே ஏத்திக் கொண்டு போறதா ராணி சொன்னாளே...' என்று அமுதா மனத்துக்குள் எண்ணினாள். உடனே திடுக்கிட்டு விழித்துக் கொண்டவளைப் போல், ''சேச்சே! நமக்கு எதுக்குக் கார் ஆசை? ராணியோட காருக்காகக் காத்துக் கிடக்கணும்! அப்புறம் அதிலே இடம் கிடைக்கலேன்னு ஸ்கூலுக்கு டயமாயிடும். அப்புறம் அவசரம் அவசரமாகத் தெருக்களைக் கடந்து ஓடணும். ஓடுகிற அவசரத்திலே காரிலோ, பஸ்ஸிலோ, மாட்டிக்கிட்டுக் காலையோ கையையோ..! அம்மாடி! வேண்டவே வேண்டாம். ஆண்டவன் கொடுத்த காலிருக்கு. சீக்கிரமாச் சாப்பிட்டு, காலா காலத்தில் பள்ளிக்குப் போயிடலாம். அது வேண்டாத ஆசை!'' என்று அமுதா தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்!

அமுதா பள்ளிக்கூடம் சென்று கொண்டிருந்தாள். வழியிலே ராணியையும் அந்த அழகிய நீலநிற பிளைமவுத் காரையும் பார்த்தாள். காரில் ராணியுடன் அவளுடைய அம்மா அந்தப் பிரபல நடிகையும் அமர்ந்திருந்தாள். கார் எங்கோ போய்க் கொண்டிருந்தது.

வேண்டாத ஆசையிலிருந்து விடுபட்ட அமுதா அந்தக் காரைப் பார்த்ததும் பார்க்காதது போல் உற்சாகமாகப் பள்ளிக் கூடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்!

கோடைக்காலம் வந்து போய் விட்டது. கோடையில் நீங்களெல்லாம் என்னைத் தேடி ஓடினீர்கள். என்னைக் கண்டதும் உங்களுக்கு எவ்வளவு உற்சாகம். சந்தோஷம்?

நான் பிறந்த கதை உங்களுக்குத் தெரியுமா..? அது என்னை விடவும் மிகவும் சுவையானது.

ஸெட்டி ஜான்ஸன் வேண்டுமென்று என்னைத் தயாரிக்கவில்லை. ஏதோ தவறுதலினால் நான் தயாரானேன். அதற்காக அவள் குற்றவாளியாகிச் சிறையில் அடைக்கப்பட்டாள். கேட்க ஆச்சர்யமாக இருக்கிறதல்லவா..? ஆம்; இது 160 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் நடந்த உண்மை நிகழ்ச்சி. அப்போது ஜேம்ஸ் மேடிசன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார். (1809–1817) இந்தக் காலத்தைப் போலவே அப்போதும் ஜனாதிபதி பெரிய பெரிய விருந்துகள் கொடுப்பது வழக்கம். வழக்கப்படி ஒருநாள் வெள்ளை மாளிகையில் பெரிய விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. ஜனாதிபதியின் மனைவியான டாலி மேடிசனின் மேற்பார்வையில் ஏற்பாடுகள் தடபுடலாக நடந்து கொண்டிருந்தன. ஆனால், என்ன காரணத்தாலோ விருந்து தடைப்பட்டது. எல்லோருக்கும் ஏமாற்றம். விருந்துக்காகப்பட்ட பாடெல்லாம் வீணாயிற்று. வெள்ளை மாளிகையில் சமையல் செய்பவள் ஒரு நீக்ரோ. அவள் பெயர் ஸெட்டி ஜான்ஸன். தயாரித்த பண்டங்கள் எல்லாம் கெடாமல் இருக்க வேண்டும் என்ற நினைவில் அவற்றையெல்லாம் அவள் ஐஸ் பெட்டியில் வைத்திருந்தாள். அது வேறு யாருக்கும் தெரியாது. ஜான்ஸனே சில நாட்களில் அதை மறந்து விட்டாள். ஆனால் சில நாட்களுக்குள்ளேயே திரும்பவும் விருந்துக்கு ஏற்பாடாயிற்று. பெட்டிகளில் இருந்த தின் பண்டங்களைப் பற்றிய விஷயம் அப்போதுதான் அவளுக்கு நினைவு வந்தது. தின்பண்டங்கள் இறுகிப் போயிருந்தன. அப்படி இறுகியவற்றை விருந்தாளிக்கு எப்படிப் பரிமாறுவது என்று சற்றுத் தயங்கினாலும் கடைசியில் அவற்றையே உபயோகித்தாள். விருந்தாளிகள் அவற்றைப் பார்த்துச் சற்றுத் தயங்கினார்கள். அவை அவர்களுக்குப் புதுமையாகத் தோன்றின. ஒருவர் மட்டும் ஒரு தின்பண்டத்தை விண்டு வாயில் போட்டுக் கொண்

ஐஸ்கிரீம் பிறந்த கதை

ஜ.வஸந்தா




டார். அது பனிக்கட்டி போல் குளிர்ந்து பற்களைக் கூச வைத்தது. உடனே அவர் பயந்து போய் ருசியைக் கூடக் கவனிக்காமல் ''விஷம், விஷம்'' என அலறினார்.

அப்புறம் கேட்க வேண்டுமா..? கூட்டத்தில் ஒரே குழப்பம். ஸெட்டி அருகேயே நின்று இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தாள். அடுத்த கணமே ஸெட்டியைப் பிடித்துச் சிறையில் அடைத்தார்கள். வந்தவர்கள் யாவரும் ஒரு பொருளையும் தொடாமல் எழுந்து போய்விட்டார்கள். மிக மகிழ்ச்சியுடன் ஆரம்பித்த விருந்து துன்பத்துடன் முடிந்ததைக் கண்ட ஸ்ரீமதி டாலி மேடிசன் மிக வருந்தினாள். விஷம் எப்படி வந்திருக்கும் என்பது அவளுக்குப் புரியவில்லை. உண்மையை ஆராய நினைத்தாள். ''தின் பண்டங்களைத் தாமே தின்று பார்த்தால் தெரியுமில்லையா..?'' என்று நினைத்தாள். உடனே தின் பண்டத்திலிருந்து ஒரு துண்டை விண்டு வாயில் போட்டுக் கொண்டாள். என்ன ஆச்சர்யம்! அந்தத் துண்டின் இனிப்பை அளவிடவே முடியவில்லை. அவ்வளவு இனிய பண்டத்தை அவள் எப்பொழுதுமே ருசித்ததில்லை. பிறகு இன்னும் கொஞ்சம் தின்றாள். ஆற அமரத் தின்றபோது அதன் ருசி இன்னும் அதிகரித்தது. இந்தப்புதிய ருசிக்கும் க்றைந்த தின் பண்டங்களுக்கும் பழக்கப்படாத விருந்தாளிகள் பயந்து விட்டார்கள் என்பதை டாலிமேடிசன் உணர்ந்தாள். முதல் வேலையாக ஸெட்டி ஜான்ஸனைச் சிறையிலிருந்து விடுவித்தாள். சிறையிலிருந்து திரும்பிய ஜான்ஸனுக்குத் தான் செய்த குற்றம் என்ன என்பது விளங்கவில்லை. உண்மையில் அவள் ஏதாவது குற்றம் செய்திருந்தால் அவளுக்குத் தெரியாதா..? இப்படித் தன்னை அறியாமலேயே (ஐஸ்கிரீமை) என்னைக் கண்டு பிடித்து விட்டாள். அதுமுதல் ஓராண்டுக்குள்ளாக அமெரிக்கா வெங்கும் என் புகழ் பரவிவிட்டது. அங்கிருந்துதான் உலகெங்கும் பரவியது. இந்தக் கோடையில் நீங்களும் நிறைய என்னைச் (ஐஸ்கிரீம்) சாப்பிட்டு மகிழ்ந்திருப்பீர்களோ?

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press Guindy, Madras - 600032.
Editor: K. R. Athmanathan
GOKULAM FORTNIGHTLY, GUINDY, MADRAS - 600032


ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்

ஜூலியஸ் ஸீஸர்



சதிகாரர்கள் ஸீஸரின் குருதியில் கை கழுவிக் கொண்டிருந்த அந்த வேளையில் மார்க் ஆந்தனியைக் கண்டதும் திகைத்துப் போனார்கள்.

''உன்னை எங்கள் நண்பனாகக் கருதலாமா:..?'' என்று ஆந்தனியிடம்




கேட்டான் புருடஸ். தன் வெறுப்பை வெளிக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை ஆந்தனி. அவர்கள் நம்பிக்கைக்கு உகந்தவனாகவே நடித்தான். ஆனால், சதிகாரர்களின் இந்த இரக்கமற்ற கொடிய செயலுக்குப் பழி வாங்குவதென்று உள்ளத்தினுள்ளே சபதமும் செய்து கொண்டான். குழுமியிருக்கும் கூட்டத்தினரிடையே ஸீஸரின் இறுதிச் சடங்கைப் பற்றித் தான் பேச விரும்புவதாகவும், அதற்கு அனுமதி வேண்டும் என்றும் கேட்டான். ஆந்தனியின் வேண்டுகோளுக்கு புருடஸ் இணங்கினான்.

ஆனால், குழுமியிருந்த குடிமக்களிடம் முதலில் பேசியது புருடஸ்தான். ''நான் ஸீஸரை உளமாற நேசித்தவன்தான். ஆனால், ஸீஸர் பெரும் பேராசைக்காரராக மாறினார். பதவி வெறி கொண்ட அவரைக் கொன்றேன்'' என்று கூறியபோது கூட்டத்தினர் ''புருடஸ் நீடூழி வாழ்க!'' என்று கோஷமிட்டனர். அப்போது ஸீஸரின் சடலம் பொதுமக்களின் பார்வைக்காகக் கொண்டு வரப்பட்டு ஒரு பளிங்கு மேடையில் கிடத்தப்பட்டது.

ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ்ஸீஸர் நாடகத்திலேயே சிறப்பான கட்டம் மார்க் ஆந்தனியின் பேச்சுத்தான். ஆந்தனி பேச ஆரம்பித்தபோது, உணர்ச்சி வசப்படவில்லை. ஆத்திரப்படவில்லை. யாரையும் குற்றம்சாட்டிக் குறைகூறவில்லை. ஆனால், அவன்பேச்சு கூட்டத்தினரை உணர்ச்சி கொள்ள வைத்தது. ஆத்திரமடையச் செய்தது. கொலையாளிகளைச் கட்டிக் காட்டிக் கூக்குரலிடவைத்தது. நிதானமாகத் தனது உரையைத் தொடங்கினான் ஆந்தனி. கூட்டத்தினரை அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டான். புருடஸ் கூறியதையெல்லாம் ஆமோதிப்பதாகக் கூறினான். ''காஷியஸையும், புருடஸையும் நான் நேர்மையற்றவர்கள் என்று கூற மாட்டேன். உங்களுக்குத் தெரியும். அவர்கள் கௌரவமானவர்கள் என்று?'' குத்தலாகக் கூறிய ஆந்தனி, ''நான் ஒரு கலகத்தை ஆரம்பிக்க விரும்பவில்லை'' என்றான். இப்படியே காஷியஸையும் புருடஸையும் 'நல்லவர்கள், கௌரவ



மானவர்கள்' என்று ஏளனமாகப் பேசிப் பேசிக் கூட்டத்தினரின் உள்ளத்திலே வெறுப்புக்கனலை விசிறி விடலானான். விநாடிக்கு விநாடி அவன் பேச்சிலே சூடு ஏறியது. கூட்டத்தினரிடையே கொதிப்பு ஏற்பட்டது.


ரமேஷ்: மாணவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு 'காப்பிரைட்' போராட்டம் நடத்தணும்
மகேஷ்: எதற்கு....?
ரமேஷ்: காப்பி அடிச்ச பிட்டை எழுதுகிறது ரைட் என்று அரசாங்கம் உணர வேண்டாமா? அதற்காகத் தான்.
-செல்லப்பா.
ஸ்ரீதர்: இந்த வெயிலில் மூளையே உருகிப் போய் விடும் போலிருக்கிறதே!
முரளி: நல்ல காலம், அந்தக் கவலை உனக்கு வேண்டாம் போ!
-லலிதா செல்லப்பா.
நண்பர்: என்னங்க, பிஸினஸ் எல்லாம் எப்படி இருக்கு?
கடிகாரக் காரர்: ஏதோ ஒரு மாதிரியாகக் காலம் ஓடுதுங்க
-ரமா ராமனுஜன்
''இது ராமர் செட். இது கிருஷ்ணர் செட், இது குறத்தி செட். இது என்ன அதன் இதே?''
''ஓ! அதுவா? அது என் பல் செட். அதைத்தான் இத்தனை நேரமாத் தேடிக்கிட்டிருந்தேன்''
-லலிதா
அரம்பம்...!
எழுத்தாளர்: இந்தக் கதைக்கு காப்பிரைட் பண்ணி வைச்சிருக்கேன்.
தயாரிப்பாளர்: அதற்கு அவசியமே இல்லே. இந்தக் கதை என்னுதுன்னு சொல்லிக்க யாருக்கும் தைரியம் வராது.
-லலிதா
விருந்தாளி: தீ. தீ. நான்காலையில் வந்ததும் காப்பி தருகிறீர்கள், மத்தியானம் வந்தாலும், சாயந்திரம் வந்தாலும் காப்பி தருகிறீர்கள், இராத்திரி வந்தாலும் காப்பி தருகிறீர்கள் ரெம்ப தாங்க்ஸ்.
வீட்டுக்காரர்: பின்னே! நீங்க சாப்பாட்டுக்கு உட்கார்ந்து விட்டால் எப்படி?
-செல்லப்பா.

REGISTERED No. M 9040

மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 50 மலேசியக் காசு